

1986/1

ஜூன்

இலங்கை

# சனத்தொகைச் சரம்

இராஜாங்க அமைச்சின் சனத்தொகை செய்தித் தொடர்புப்பிரிவின் வெளியீடு

இலங்கை

# சனத்தொகைச் சரம்

1986 ஜூன் பிரதி : 1

இராஜாங்க அமைச்சின், சனத்தொகை செய்தித் தொடர்புப் பிரிவின் ஒரு வெளியீடு இலங்கை சனத் தொகைச்சரம் ஆகும். நீங்களும் உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஏற்றவை பிரசுரிக்கப்படும். அனுப்ப வேண்டிய விலாசம்:- ஆசிரியர், சனத்தொகைச்சரம் சனத்தொகைச் செய்தித்தொடர்புப் பிரிவு, இராஜாங்க அமைச்சு டிரான்ஸ்வேக்ஸ் பணிமனை கொழும்பு 1. தொலைபேசி இல. 547465

ஆசிரியர் பீட ஆலோசகர் : குயின்ரஸ் பெர்னாண்டோ

ஆசிரியர்கள் : முபீதா உஸ்மான்
: ஏ. எச். முகம்மது

பிரசுரம் : சனத்தொகை செய்தித் தொடர்புப்பிரிவு, இராஜாங்க அமைச்சு

## உள்ளடக்கம்

சனத்தொகையும் செய்தித் தொடர்பும் 2

சனத்தொகைக் கொள்கை அபிவிருத்திக்குத் தேவை (பேட்டித்தொகுப்பு) 4

சனத்தொகை பற்றி உலக வங்கியின் கருத்து 7

மனிதனும் மக்கட் பெருக்கமும் 9

சனத்தொகை செய்தித் தொடர்பு -நிகழ்ச்சித் திட்டம் 11

சனப்பெருக்க வேகத்துக்கு..... 14

இலங்கையில் பிறப்பு வீதம் வீழ்ச்சி 15

வறிய நாடுகளிலேயே சனத்தொகை அதிகரிப்பு 16

பாடசாலைகளில் சனத்தொகைக் கல்வி 17

சனத்தொகை வளர்ச்சியும்- -சனத்தொகைக் கொள்கையும் 20

திட்டமிட்டு வாழப் பழகிடுவோம் (கவிதை) 21


இலங்கை சனத்தொகை விபரங்கள் 22

இலங்கையின் பொருளாதாரத்தில் — — சனத்தொகை அதிகரிப்பின் தாக்கம் 25

குழந்தைச் செல்வம் 27

# சனத்தொகையும்

## செய்தித் தொடர்பும்



**1981**ல் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத்தின் பிரகாரம் இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம் 1. 7 ஆகும். 1971ல் பிறப்பு வீதம் 2. 3 ஆகவும் 1953ல் 2. 8 ஆகவும் இருந்தது. முப்பது வருட கால இடைவெளியில் அதாவது 1953ல் 2. 8 ஆக இருந்த பிறப்பு வீதம் 198'ல் 1. 7 ஆகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டுக்கு இது ஒரு பெரும் சாதனையாகும்.

இம்மாற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிவதும், எதிர்கால சனத்தொகைத் திட்டங்களுக்கு உபயோகிக்கப்படும் வழி முறைகளைப் பற்றி ஆராய்வதுமே எமது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. இலங்கை அரசின் அரசியல் குறிக்கோள்

2. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிலையங்கள் என்பவையே இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியில் அபிவிருத்தி ஏற்பட முக்கிய காரணமாக அமைந்தன என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

மூன்றும் உலக நாடுகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அரசியல் செல்வாக்கின் பயனாகவே வெற்றி அடைகின்றன என்பது மறைக்க முடியாத ஒரு விடயமாகும். சனத்தொகையைத் திட்டமிடும் நிகழ்ச்சி புதிதாக அறிமுகப்படுத்தப்படுபவை. எனவே இவற்றின் வெற்றிக்கு அரசின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. திட்டமிடப்படாத வளர்ச்

சியைத்தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும். அரசினால் நாட்டு மக்கள் யாவருக்கும் இலவசமாகவே குடும்பத் திட்டச் சேவைகள் வழங்கப்படுவதுடன் நிரந்திர குடும்பத்திட்ட முறைகளைத் தாமாக மேற்கொள்பவர்களுக்கும் கைச்செலவுக்குப் பணமும் வழங்குகிறது. இது அரசின் கொள்கையாகும். சனத்தொகை நடவடிக்கைகள் சம்பந்தமான திட்டங்களைச் சிறந்த முறையில் மேற்கொள்ளும் பொருட்டு உயர் நிலையில் சனத்தொகைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளரின் நேரடி நிர்வாகத்தில் இந்நிலையம் இயங்குகிறது. சுகாதார அமைச்சின் ஊடாக குடும்பத்திட்டச் சேவையினைப் பரப்புவதுடன் நில்லாது பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் பொருட்டு மாவட்டம் தோறும் மாவட்ட சனத்தொகைக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டன.

அரசின் கொள்கை வெற்றி பெறும் பொருட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சி உறுப்பினர்களதும் ஒத்துழைப்புப் பெற முயற்சி செய்யப்பட்டதுடன் சனத்தொகை அபிவிருத்திக்காகப் பாராளுமன்ற ஆலோசனைக் கமிட்டி ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் பொருளாதார அபிவிருத்தியைக் கவனிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற உபகுழுவுக்கு சனத்தொகை நடவடிக்கைகளைக் கவனிக்க பொறுப்பு வழங்கப்பட்டது.

சனத்தொகை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்தும் பொருட்டு சர்வதேச நிதி வழங்கும் ஸ்தாபனங்களான சனத்தொகை நடவடிக்கைகளுக்கான ஐ. நா. ஸ்தாபனம், சுவீடன், சர்வதேச அபிவிருத்தி இயக்கம் ஆகியவற்றின் ஆதரவு பெறப்பட்டதுடன் உள்ளூரிலுள்ள குடும்பத்திட்டச் சங்கம், சமூக அபிவிருத்தி சேவைகள், சுயவிரும்பி கருத்தடை செய்வோருக்கான சங்கம், இலங்கை சனத்தொகை சேவை ஆகிய ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது.

அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் மத்தியில் குடும்பத்திட்டச் சேவையினைப் பிரபல்யப்படுத்தும் பொருட்டு தாமாகவே கருத்தடை செய்வோருக்கு சன்மானமும் விடுமுறை வசதிகளும் வழங்கப்பட்டன.

இந்நடவடிக்கைகளையெல்லாம் கவனிக்கும் பொருட்டு சுகாதார அமைச்சின் கீழ் ஒரு தேசிய சபை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் சனத்தொகை நடவடிக்கைகளில் அரச ஸ்தாபனங்களுடன் அரசாங்க சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களும் பெரும் பங்கு வகித்து வருகின்றன. 1977ம் ஆண்டு முதல் சனத்தொகை, குடும்பத்திட்ட நடவடிக்கைகளில் பெரும் அபிவிருத்தியேற்பட்டுள்ளது. நாடெங்குமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் குடும்பத்திட்ட சேவைகள் நடைபெறுகின்றன. எமது நாட்டில் சுகாதார வசதிகள், குடும்பத்திட்ட சேவைகள் உட்பட யாவும் இலவசமாகவே வழங்கப்பட்டன. நாடெங்கும் பரவலாக்கப்பட்ட சுகாதார சேவையின் பலனே 1980 முதல் சிசு மரண வீதம் வெகுவாகக் குறைந்தமையாகும். பிரசவத்தின் போது தாய்மாரின் மரண வீதமும் பெரும்பாலும் குறைந்துள்ளது.

திறமையான சுகாதார சேவையின் மூலம் குடும்பத்திட்ட நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டதாலேயே குறிப்பிடக்கூடிய அளவு பயனைப் பெறக்கூடியதாயிருந்தது.

இவ்விடயத்தில் செய்தித் தொடர்பு சனத்தொகை கல்வித் திட்டங்களும் பெரும் பங்கு கொண்டு பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. தகவல் திணைக்களத்தின் குடும்பத்திட்டப் பிரசாரப் பிரிவு, சுகாதார அமைச்சின் சுகாதார கல்விப்பிரிவு, திட்ட அமுலாக்கல் அமைச்சின் சனத்தொகைத் தகவல் நிலையம் என்பன பெரும் தொண்டாற்றின.

கடந்த ஐந்தாண்டுகளில் கிடைக்கப்பெற்ற சனத்தொகைக் நடவடிக்கைகளைக் நோக்கினால் இத்துறையில் மேலும் வெற்றி பெற சில விஷயங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மக்களுக்குத் தேவையேற்படும் போது குடும்பத்திட்டச் சேவையினை உடனடியாக அளிக்கக் கூடியதாக இருத்தல் மிக அவசியம்.

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு உதவும் பொருட்டு பயிற்சிக்கான உபகரணங்கள் வழங்குதல், செய்தித்துறை மற்றும் ஆராய்ச்சிகளை மீளாய்வு செய்தல் ஏனைய செய்தித் தொடர்பு நிகழ்ச்சிகளுடன் சனத்தொகைத் திட்டங்களைப் புகுத்தல், மக்கள் மத்தியில் பிரசுரங்கள், கையேடுகளை விநியோகித்தல் ஆகிய இன்னோரன்ன நடவடிக்கைகள் மூலம் சனத்தொகை நடவடிக்கைகளில் மேலும் திருப்பம் காணலாம்.

மேலும் 1963ம் ஆண்டுக்கும் 1971ம் ஆண்டுக்கும் இடையில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைந்ததற்கு திருமண வயது உயர்த்தப்பட்டதும் திருமணங்கள் பிற்போடப்பட்டதுமே முக்கிய காரணமாகும். பெண்கள் உயர் கல்வி, மற்றும் தொழில் துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டதே திருமணங்கள் பிற்போடப்பட்டமைக்கு மூல காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல நாடெங்கும் பரவலாக்கப்பட்ட சுகாதார சேவைகள், மக்களின் அறிவு வளர்ச்சி, மற்றது குடும்பத்திட்டத்தை மக்கள் மத்தியில் பலவந்தமாகப் புகுத்தாது அவர்கள் விரும்பினுல் மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அரசின் தாராளக் கொள்கை எல்லாம் சேர்ந்து குடும்பத் திட்டம் மக்களிடையே நல்ல பயன் பெற்றது.

1982ல் 15க்கும் 45 வ்யதுக்கும் இடைப்பட்ட திருமணமான பெண்களில் 55 வீதமானவர்கள் குடும்பத்திட்ட முறைகளை ஏற்றுள்ளனர் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. 1975ல் இது 32 வீதமாக மட்டுமே இருந்தது. அதாவது 1982ல் குடும்பத்திட்டம் பற்றிய விளிப்புணர்ச்சி 100 வீதமாக இருந்தது போற்றுதற்குரியது. ஏனெனில் 1975ல் 90 வீதமாகவே இருந்தது.

குடும்பத்திட்டம் பற்றிய விளிப்புணர்ச்சி 100 வீதமாக இருந்தபோதிலும் உண்மையாக குடும்பத்திட்டத்தை 50 வீதமானவர்களே அனுஷ்டித்து வருகிறுர்கள். செய்தித் தொடர்பு நிகழ்ச்சிகள் மூலமாக இந்நிலையை அபிவிருத்தி செய்யலாம்.

---

கலாநிதி அனுர குணசேகரா

( பணிப்பாளர் நாயகம் )

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

---



பேராசிரியர் நந்ததாச கோதாகொட

## சனத்தொகைக்கொள்கை அபிவிருத்திக்குத் தேவை

ஒவ்வொரு நாட்டிற்கும் தனியானதொரு சனத்தொகைக் கொள்கை அவசியம். என மருத்துவப் பீடப் பேராசிரியர் நந்ததாச கோதாகொட தெரிவித்தார். அண்மையில் கொழும்பிலுள்ள அவரது காரியாலயத்தில் வைத்து சந்தித்த போதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். அவருடன் கழிக்கக் கிடைத்த அரைமணி நேரத்திலும் சனத்தொகை செய்தித் தொடர்பு, வெகுஜனத் தொடர்பு, குடும்பத் திட்ட செய்தித்தொடர்பு ஆசிய துறைகளில் அவருக்கிருந்த அனுபவங்களையும், அத்துறைகளில் அவர் காட்டும் ஆர்வத்தையும் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர் பேசும் போது தனியான ஒரு பாணியில் சுவாரஸ்யமாகவே பேசினுர்.

சனத்தொகைக் கொள்கை பற்றிய செய்தியைப் பரப்பும் போது முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் சனத்தொகைத் திட்டங்கள் வகுக்கப்படும் போதும், அவை அமுல் நடத்தப்படும் போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல் விசேடமாக அதனை நடைமுறைப் படுத்தவிருக்கும் மக்கட் பிரிவினருக்கும் இது பற்றிய சரியானதொரு விளக்கம் தெளிவாக அளிக்கப்படல் வேண்டும். ஏனெனில் இதன் வெற்றியின் பெரும் பங்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

வைத்தியத்துறைப் பேராசிரியரான நீங்கள் வெகுஜனத் தொடர்புத் துறையில் பிரபல்யமும், அனுபவமும் உடைய ஒருவர் என்ற ரீதியில் சனத் தொகை பற்றிய செய்தியை எடுத்துச் செல்ல நீங்கள் சிபார்சு செய்யும் செய்தித் தொடர்பு முறை யாது? எனக் கேட்டதற்கு அவர் கூறியதாவது,

''குறிப்பிட்ட ஒரு வழிமுறையால் அல்லது சாதனத்தால் மட்டும் தான் இச்செய்தி எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஏனென்றால் செய்தியைப் பெறுபவரின் சுற்றுடல், கல்வித்தரம், கலாசாரப் பாரம்பரியம், வயது மட்டம், அனுபவம் என்பவற்றுக்கேற்ப பொருத்தமான வழிமுறையைத் தெரிவு செய்தே வழங்கப்படவேண்டும். எனவே சபையினருக்குப் பொருத்தமான முறையைத் தெரிவு செய்வது தான் எதிர் பார்த்த வெற்றியைத் தரும்'' என்று விளக்கினர்.

மேலும் செய்தித் தொடர்புத் துறையில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த சாதனங்களைவிட எளிய சாதனங்களைக் கொண்டே (அதி நுட்பமில்லாத) இலகுவில் மக்களை அணுகலாம். இதுவே வெற்றியின் மற்றுமொரு இரகசியமாகும். மேலும் வளர்முக நாடுகளில் காணப்படும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சாதனம் இருப்பதை நாம் மறந்து விடலாகாது. அதுதான் 'ஆட்களிடைத் தொடர்பு' எனப்படும் நேரடித் தொடர்பு முறையாகும்.

அவர் கட்புல சாதனங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது எவ்வகையான செய்தித் தொடர்புவழி முறையிலும் புலன் சாதனங்களின் உபயோகமானது கூடுதலான பயன் தரக் கூடியது. ஏனெனில் இவற்றின் மூலம் குறுகிய காலத்தில் இலகுவாக மக்களின் கவனத்தை ஈர்ந்து பசுமையாகப் பதியக் கூடிய வகையில் செய்திகளை வழங்கலாம்.

நேரடி ஆட்களிடைத் தொடர்பின் போது எமது உடல் உறுப்புகளில் ஏற்படும் அசைவுகள், மாற்றங்கள் சிறந்த புலன் சாதனங்களாகும். ஒருவர் இன்னொருவருக்கு அல்லது பலருக்குக் கருத்து வழங்கும்போது

**''புலன் சாதனங்கள் மகிழ்ச்சியூட்டுவதற்கோ பொழுது போக்கிற்கோ அல்ல செய்தியை வழங்குவதற்கு மட்டுமே''**

அவர் தம்மை அறியாமலேயே தனது கை, விரல்கள், தலை மற்றும் அங்கங்களை அசைக்கிறார். இது போன்ற இன்னும் குறைந்த செலவிலான சாதனங்களின் மூலமே கூடுதலான பயனை அடைய முடியும் பயன்படுத்தப்படும் சித்திரங்களும், சொற்களும் சம்பந்தப்பட்ட வாசகரால் விளங்கிக் கொள்ளக் கூடியவைகளாகவும் இருத்தல் வேண்டும்.

நவீன தொடர்பு சாதனங்களைப் பிரயோகிப்பதில் உள்ள தடைகளைப் பற்றிக் கூறமுடியுமா? என்று கேட்டதற்கு அவர் தொடர்ந்து கூறியதாவது, நவீன தொடர்பு சாதனங்களின் தொழிற்பாட்டிற்கு மிகவும் பெறுமதி வாய்ந்த புலன் சாதனங்கள் தேவைப்படுகின்றன. இவை சிறந்தவை தான் எனினும் நாம் மறந்து விட முடியாத சில தடைகள் காணப்படுகின்றன. அவை என்னவென்றால் தேவையான பொருட்களுக்கு உயர்ந்த முதலீடு அவசியம். அவற்றைக் கையாள்வது சிரமம். மேலும் சம்பந்தப்பட்ட துறையில் பயிற்றப் பட்டவர்கள் கையாளும் போது மட்டுமே உரிய பயனை அடைய் முடியும். அடுத்த படியாக நவீன சாதனங்களின் இயக்கமானது எல்லா மக்களாலும் இலகுவில் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. எனினும் இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் செய்தியை வழங்குவதைவிட அப்பொருள் பற்றிய ஆசையை ஏற்படுத்துவதாகவும் அமையும். எனவே இலகுவான முறையே சிறந்தது எனவும் வலியுறுத்தினர் பேராசிரியர் கோதாகொட.

''புலன் சாதனங்கள் மகிழ்ச்சியூட்டுவதற்கோ பொழுதுபோக்கிற்கோ அல்ல செய்தியை வழங்குவதற்கு மட்டுமே''.

மேலும் செய்தித் தொடர்பின் போது பயன்படுத் தப்படும் சொற்களும், சித்திரங்களும் சம்பந்தப்பட்ட வாசகரால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். செய்தியைப் பெறுபவர்கள் விளங்கிக் கொள்ளமுடியாத பட்சத்தில் வரையும் சித்திரங்களும் சொற்களும் பயனற்றதாகும். சனத்தொகை செய்தித் தொடர்பின் போது இவ்விடயத்தில் மிகவும் எச்சரிக் கையாக இருத்தல் வேண்டும்.

உயர்வு, தாழ்வு என்ற பேதமின்றிக் கருத்துக்களைத் திரட்டி அதனைக் கொண்டு கருத்துப் பரிமாறப்படும் போது மக்களிடமிருந்து கூடுதலான பயனை எதிர் பார்க்க முடியும். இதுபற்றிக் கதைக்கும் போது சீனப் பழமொழி ஒன்று நினைவுக்கு வருவதாகச் சொன்னார் அதாவது ''முதலில் மக்களிடம் செல்லுங்கள். அடுத்து அவர்களுடன் பழகி அவர்கள் தெரிந்தவற்றைக் கற்று, அவர்கள் கருத்துக்களை மேலும் விருத்தி செய்ய உதவுங் கள்.''

இதுவரை செய்தித் தொடர்புக்கு சாதகமான நுட் பங்கள் பற்றி செவிமடுத்த நான் செய்தித் தொடர்புத் தடைபற்றி ஏதாவது சொல்ல முடியுமா? அதாவது செய்தித் தொடர்புத் துறையில் ஏற்படக்கூடிய இடை யூறுகள் என்ன என்று வினவிய போது அவர் கூறியதா வது இதுவரை கூறப்பட்டவற்றிலே தடைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். மேலும் விசேடமான ஒரு தடை என்னவென்றால் நான் அறிந்த வரையில் எத்தனையோ வகையான செய்தித் தொடர்பாளர்கள் இருக்கிறார் கள். அவர்களில் அநேகர் மாத இறுதி சம்பளத்தைக் குறிக்கோளாகக் கொண்டே செயல்படுகிறார்கள். இது மக்களும் அறிந்ததோர் விடயம். நாம் எல்லோரும் மாதச் சம்பளத்தைப் பெறுவதில் மகிழ்ச்சியடைகி றோம். ஆனால் உண்மையான செய்தி தொடர்பாளன் தன்னுடைய தொழிலிலே திருப்தி அடைகிறான். கருத் துப் பரிமாற்றம் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் என் பதை நாம் மறந்து விடக்கூடாது. இன்னுமொரு புரிந்து கொள்ள முடியாத செய்தித் தொடர்புத் தடை என்ன வென்றால் ''கொழும்புப் பெருமகன்'' என்னும் தடை யாகும். அதாவது ஒரு செய்தியை வழங்கும் ஒருவர் பெறுபவரைக் கவரும் நோக்குடன் செய்தி வழங்கப் படும் போது செய்தி பொருளாக அமையாது செய்தி வழங்குபவர் பொருளாக மாறுகிறார். எம் அனைவரை யும் விடக் கேட்பவரே முக்கியமானவராவார். செய் தித் தொடர்புப் படிமுறையானது வழங்குபவரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அன்றி செய்தியைப் பெறுபவரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகும் என விளக்கினார்.

அதனை அடுத்து சனத்தொகை மட்டுப்படுத்தலுக் காக வழங்கப்படும் ஊக்குவிப்புகள் பற்றிய உங்கள் கருத்து என்ன? என்ற வினாவுக்கு அது உங்கள் அவதானிப்பைப் பொறுத்ததே அதாவது குடும்பத்திட் டத்தை நடைமுறைப்படுத்துபவர்களின் நோக்கத்தைப் பொறுத்தே ஊக்குவிப்பின் பயன்பாடு தங்கியுள்ளது. குடும்பத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒருவர் ஊக்குவிப்பை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு அத னைச் செய்வது கேவலமான ஒன்றாகும். ஏனென்றால் குடும்பத்திட்டம் செய்து கொள்ளும் ஒருவரின் கைச் செலவை ஈடுசெய்வதற்காகவே இக்கொடுப்பனவும், லீவும் வழங்கப்படுகிறது.

நிரந்தரக் குடும்பக்கட்டுப்பாடு செய்ய ஒருவர் விரும்பினால் அவருக்கு அதனால் ஏற்படக்கூடிய நன்மை கள் சிலவேளை உண்டாகக்கூடிய பக்க விளைவுகள் என்ப வற்றைப்பற்றி நன்கு விளக்க வேண்டும். அவர்கள் பூரணமாக ஏற்று கணவன் மனைவி இருவரும் தீர்க்க மான முடிவெடுத்த பின்னரே சத்திரசிகிச்சை செய்தல் சிறந்தது என்றுகூறினார்.

பேட்டித் தொகுப்பு:
ஏ. எச். முகம்மது

---

### 35 வயதுக்கு மேற்பட்ட தாய்மாருக்கு

## ஒரு நற்செய்தி

அண்மைக் காலங்களில் ஐக்கிய அமெரிக்காவில் 35 வயதுக்கு மேற்பட்ட தாய்மார் பிரசவத்தின்போது அல்லது கருச்சிதைவின் போது மரணிப்பது வெகுவா கக் குறைந்துள்ளது. இது பிரசவங்களைப் பிற்போடும் தாய்மாருக்கு ஒரு நற்செய்தியாகும்.

வைத்தியத் துறையில் அண்மையில் ஏற்பட்ட அபி விருத்தி மற்றும் தற்சமயம் பெண்கள் 35 வயது எல்லைக் குள் பல வசதிகளையும் கொண்டவர்களாக உள்ளதால் இக்காலத்தில் குழந்தைகள் பெறுவதில் நாட்டம் கொண்டுள்ளனர் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மருத்துவ சங்கத்தின் அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் 35 அல்லது அதற்கு மேற்பட்ட பெண் களை பிரசவத்தின் போது அதிக கஷ்டங்களை அனுப விக்கிறார்கள் என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள் ளது இருப்பினும் 1982ம் வருடத்தை விட 1974-78ம் வருடங்களில் பிரசவம் மற்றும் கருச்சிதைவினால் 36 வயதுக்கு மேற்பட்ட தாய்மாரின் மரண வீதம் அதிக மாகக் காணப்பட்டது.

# சனத்தொகை பற்றிய

## உலக வங்கியின் கருத்து

உலக வங்கியினுல் 1984ல் வெளியிட்ட உலக அபி விருத்தி பற்றிய அறிக்கையில் சனத்தொகை பற்றியே முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. துரித சனத் தொகை வளர்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பெரும் முட்டுக்கட்டை எனவும் உலகம் எங்கும் வாழும் கோடான கோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறைக்கும் என்றும் இவ் அறிக்கையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகையைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட இன்னேரன்ன வழிமுறைகளால் கடந்த பத்து ஆண்டு காலத்தில் பல நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்ருண்டில் 1950ம் ஆண்டு வரையில் வருடாந்தம் ஒரு சதவீதமாக சனத்தொகை அதிகரித்தது. தொடர்ந்து எதிர் பாராத விதமாக வருடத்திற்கு 2 சதவீதமாக அதிகரித்து 1950ல் இருந்ததைவிட இன்று சனத்தொகை இரு மடங்காக வளர்ச்சி பெற்றுள்ளது சிந்தனைக்குரிய விடயமாகும். மேலும் வருமானம் குறைந்த மக்களிடையே சனத்தொகை வளர்ச்சி அதிகமாக இருந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

1984ல் சனத்தொகை வளர்ச்சி பற்றி கணக்கெடுக்கப்பட்ட போது அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளிலேயே சனத்தொகை வளர்ச்சி கூடுதலாக இருந்ததமை கண்டு பிடிக்கப்பட்டது. இருந்தும் அண்மைக் காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 1965ம் ஆண்டு 2. 4 வீதமாக இருந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் இன்று 2 வீதமாகக் குறைந்துள்ளது. இதிலிருந்து சனத்தொகை வளர்ச்சி வீதம் இந்நாடுகளில் தாமாகவே குறையும் என்று எதிர்பார்க்க முடியாது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தம்பதியர்க்குக் குழந்தைகள் குறைவாக இருப்பினும் சனத்தொகை வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் பல வருடங்களுக்கு உயர்வாக இருக்கும் என்று ஊகிக்கப்படுகிறது. காரணம் தற்சமயம் இளைஞர்களாக உள்ள பெரும் தொகையானவர்கள் - வாலிபர்களும் யுவதிகளும் சில வருடங்களில் குழந்தை பெறும் வயதை அடைவர்.

உலக வங்கியின் ஊகம் சரியாக இருப்பின் 2050 வருடத்தில் தற்போது 4,800 மில்லியன் ஆகவுள்ள சனத்தொகை ஏறத்தாள 10,000 மில்லியனுக அதிகரிக்கும். இதனுல் எதிர்காலத்தில் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அஞ்சப்படுகிறது. மேலும் மக்கள் தொகை அதிகரிக்க அதற்கேற்ப வளங்கள் இல்லாது போகும். அத்துடன் 1960ம் ஆண்டைத் தொடர்ந்து சிசு மரண வீதம் குறைந்துள்ளதால் உலகின் சனத்தொகையில் தற்போது 40 வீதமானவர்கள் 15 வயதுக்குக் குறைந்தவர்களாகவே உள்ளனர். எனவே பெரும்பான்மையான நாடுகள் இந்நூற்ருண்டின் இறுதியில் பள்ளிக்கூட வசதிகளைப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனவே சனத்தொகை அதிகரிக்க தேவைகளும் அதிகரிக்கும் தொடர்ந்து இந்நிலையேற்பட்டால் பெரும்பான்மையான நாடுகள் பல இக்கட்டான சந்தர்ப்பங்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

பொதுவாக வசதி குறைந்த, நிரந்தர வருமானம் அல்லது போதிய வருமானம் அற்ற, சுகாதார வசதிகள் இல்லாத, குடும்பத்திட்ட சேவைகளைப் பெற இயலாத மக்களிடையே தான் அதிசமான குழந்தைகள் காணப்படுகின்றன. வறுமையான குடும்பங்களில் மறைந்துள்ள ஒரு உண்மையென்ன வெனில் வருமானம் குறைவாக இருந்த போதும் வேறு பல வழிகளில் குழந்தைகளுக்குச் சலுகைகள் கிடைக்கின்றன. உதாரணமாக இலவச உணவு முத்திரை, கல்வி வசதிகள் போன்றவை இதனுல் குழந்தைகள் தொகை அதிகரிக்க சலுகைகளும் அதிகரிக்கின்றன.

- அன்றாடம் நாட் சம்பளத்திற்குக் கூலி வேலை செய்யும் தாயொருவர் மகப் பேற்றுக் காலத்தில் தொழிலுக்குப் போய்ப் பெற்றுக் கொள்ள முடியாத சம்பளத்தை குழந்தை பெரியவனாகியதும் அவன் தொழில் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்கிறாள்.

- சிசு மரணங்கள் ஏற்படுமாயின், ஓரிரு குழந்தைகளாவது உயிருடன் இருக்க வேண்டுமென்ற நோக்குடன் பெற்றார் மேலும் சில குழந்தைகள் பெற விரும்புவது இயல்பு.

- குடும்பத்திட்டம் பற்றிப் போதிய அறிவு பெற முடியாமையும் குழந்தைகள் அதிகரிக்கக் காரணமாகும்.

- வயதான காலத்தில் தம்மைப் பராமரிக்க, தமது சொத்து வளங்களைப் பாதுகாக்க அதிகமான பிள்ளைகள் இன்றியமையாதது என்று பெற்றோர் ஆணித்தரமாக நம்புகிறார்கள்.

அதிகமான குழந்தைகள் இருப்பின் குடும்பத்திற்கு அதிக பயன் உண்டு என்று பெற்றார் எவ்வளவு தான் உறுதியுடன் இருந்தாலும் குழந்தைகளால் எதிர் பார்ப்பதை விடக் கூடுதலான செலவே ஏற்படும். சில சமயம் பிள்ளைகள் நோய் வாய்ப்பட்டு பெற்றோருக்கே பெரும் சுமையாக மாறலாம்.

மேலும் வாலிபப் பருவம் அடைய முன்னர் குழந்தைகள் இறக்கலாம். தொழில் வசதிகள் பெறும் பொருட்டு பிள்ளைகள் பெற்றாரிடமிருந்து வெகு தூரம் பிரிந்திருக்கலாம். இப்படி இன்னோரன்ன பல காரணங்களால் பிள்ளைகள் அதிகமாயிருப்பின் நன்மைகளும், சலுகைகளும் பன்மடங்காகும் என்ற கூற்றுப் பொய்யாகலாம் அல்லவா?

அது மட்டுமல்ல சில வேளைகளில் குடும்பத்தில் பிள்ளைகள் அதிக எண்ணிக்கையில் இருப்பின் பெற்றோர் பயன் பெற இயலும். இருப்பினும் கால இடைவெளியின்றி பிறக்கும் குழந்தைகள் பெரும்பாலும் நோய்வாய்ப்படுகின்றன. போஷாக்கின்மையால் அவதியுறுகின்றன. அடிக்கடி கருவுறுவதால் தாய் பலவீனமடைந்து நிறைகுறைவான, பலவீனமான குழந்தைகள் பிறக்கின்றன. எனவே திட்டமிட்டு தாய், சேய் நலத்தினைக் கருத்திற் கொண்டு போதிய இடைவெளி விட்டு குழந்தைகள் பெறுவதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 10 வீத சிசு மரணங்களைத் தடுக்கலாம். இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சனத்தொகை அதிகரிப்பினால் சம்பந்தப்பட்ட குடும்பத்திற்கு மட்டுமல்ல அரசாங்கங்களுக்கும் இன்னோரன்ன பிரச்சினைகள் ஏற்படும். என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் குடும்பத்திட்ட சேவை எங்கும் தற்சமயம் பரவலாக்கப்பட்டுள்ளதாலும் திருமண வயது அதிகரிக்கப்பட்டுள்ளதாலும் பெண்கள் உயர் கல்வி தொழில் துறையில் ஈடுபாடு கொண்டுள்ளதாலும் எதிர் காலத்தில் சனத்தொகை வளர்ச்சியை ஓரளவேனும் மட்டுப்படுத்த முடியும் என்று அவ்வறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடும்பத்திட்டச் சங்கத்தின் நிகழ்ச்சித் திட்டம்

கடந்த வருடம் இலங்கையின் பின் தங்கிய 216 கிராமங்களுக்குக் குடும்பத் திட்டச் சங்கம் ஒளியேற்றியுள்ளது. கிராமப் புறத்தைச் சேர்ந்த 5000 தொண்டர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து அடிப்படைச் சுகாதாரம் குடும்பத் திட்டச் செய்தியைப் பரப்புதல் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரையும் 202 கிராமங்களில் குடும்பத்திட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குடும்பத்திட்டம் தொடர்பான நிகழ்ச்சிகளை பெற்றோர் மத்தியில் ஏற்படுத்தியதுடன் நில்லாது குடும்பத்திட்டச் சங்கத் தொண்டர்களுக்கும் பல போதனை வகுப்புகளை நடத்தியது.

அது மட்டுமின்றி தொண்டர்களின் சமூக, பொருளாதார நிலையைக் கவனிக்கும் பொருட்டு தொண்டர் அபிவிருத்தி நிதி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடும்பத்திட்டச் சங்கத்தின் சேமலாப இயக்கங்களும் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

தாய்மார்களுக்கான கூட்டங்கள், நோய்த் தடுப்பு இயக்கங்கள், கலாச்சார சமய நிகழ்ச்சிகள், சிரமதான திட்டங்கள் இளைஞர் மற்றும் மாதர் முன்னணியினர்க்கான கூட்டங்கள், பாடசாலைகளில் சனத்தொகை நிகழ்ச்சிகள் என்பனவற்றைக் குடும்பத்திட்டச் சங்கம் மாவட்டம் தோறும் நடாத்தி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மனிதனும் மக்கட் பெருக்கமும்

ச. வாசுதேவன் ( தயாரிப்பாளர் )
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சமூக வாழ்க்கையின் வரலாறும், அத்துடன் இணைந்த பிரச்சினைகளும் சமூகத்தைப் போன்றே மிகவும் பழமையானவை. மனிதன் நாகரீகத்தின் தொடக்க காலத்தில் ஏனையோருடன் கூடி வாழ முற்பட்ட பொழுது முதன் முதலில் ஏற்பட்ட பிரச்சினைகளையும், சிக்கல்களையும் தீர்ப்பதற்கான வழியில் அவனால் கவனம் செலுத்தாதிருக்க முடியவில்லை. இயல்பிலேயே மனிதன் ஒரு தத்துவஞானி. அப்படியானால் சமூக வாழ்க்கையின் திகைப்பூட்டும் பிரச்சினைகளைப் பற்றி அவன் சிந்திக்க வேண்டிய ஒரு நிலைமையில் இயல்பிலேயே சமூகவியலாளனாகிறான்.

'சோஷியாலஜி' என்ற சொல் 'சொஸைடாஸ்' (சமூகம்) என்ற இலத்தீன் சொல்லிலிருந்தும் 'லோகாஸ்' (அறிவியல் அல்லது படிப்பு) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்தும் தோன்றியது இச்சொல் மிகச் சமீபகாலத்தில் இருந்து தான் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இச்சொல்லை பிரெஞ்சு நாட்டுத் தத்துவ ஞானியும், சமூகவியலாளருமான ஆகஸ்ட் காம்ட் என்பவர் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் முதன் முதலில் உருவாக்கிப் பயன்படுத்தினர். மாறாத இயற்கை விதிகளினால் கட்டுட்படுத்தப்படுகிற சமூகப் பகுதிகளைப் பற்றி ஆராய்ந்து வருகிற அறிவியலே சமூகவியலாகும். என்று அவர் வரைவிளக்கம் தருகிறார் இயற்கையியல்களில் போலவே அவர் சமூகவியலிலும் அறிவியலைப் பயன்படுத்தச் சொன்னார் சமூகப் பரிணாமம் முன்னேற்றத்துடன் இயைந்து செல்வதாக அவர் நம்பினர். அந்த முன்னேற்றத்தை அவர் சமய- போர் நிலை, பகுத்தறிவு- சட்ட நிலை, அறிவியல்- தொழிற்றுறை நிலை என்ற மூன்று நிலைகளைக் கொண்டதென்று வகுத்தார்.

இம்மூன்று நிலைகளையும் நோக்கும்போது சமூகவியலின் ஓர் அங்கமான இன்றைய மனிதன் வாழும் இன்றைய சமூகத்துக்கு இம்மூன்று நிலைகளும் மிக அத்தியாவசியமானதாகவே தோன்றுகிறது. இன்றைய மனிதனின் பிரச்சினைகள் என்ன? அவற்றை அவன் எவ்வாறு தீர்க்கப் பார்க்கிறான் என்பதே இன்றைய மனித இயக்க நிலையாகிறது. உண்மையில் மனிதனது அடிப்படைப் பிரச்சினைகள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பன தான் என்று நாம் காலம் காலமாக நம்பி வந்துள்ளோம். ஆனால் இன்றைய சராசரி மனிதன் தன் நெஞ்சைத் தொட்டு இவை மட்டுமே எனது தேவைகள் என்று கூறித் திருப்திப்பட்டுக் கொள்வானா? இதற்குப் பதில் இல்லையென்பதேயாகும் அப்படியானல் அவனது தேவைகள் என்ன? உணவு, உடை இடம் என்பன தான் என்று நாம் காலம் காலமாக நம்பி வந்துள்ளோம். ஆனல் இன்றைய சராசரி மனிதன் உணவு, உடை, இடம் இவற்றைவிட சமூகநிலை அல்லது சமுதாய அந்தஸ்து அவனுக்குத் தேவையாகிறது இந்தச் சமுதாய அந்தஸ்து அவன் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த அந்தஸ்தை எதிர்பார்க்கும் அல்லது அடைய முற்படும் ஒருவனுக்கு ஏற்படும் நேரடிப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையாகவிருக்கும். இங்கே சமூகவியலுக்கும் பொருளியலுக்கும் சம்பந்தம் தானகவே ஏற்பட்டு விடுகிறது

தனிமனிதன் ஒருவனை இந்தப் பொருளியல் பிரச்சினை தாக்கும் போது அவன் சிந்திக்க முற்படுகிறான். தனது அடிப்படைத் தேவைகளை அந்தஸ்தை நிலை

நிறுத்திக் கொள்ள தனக்குள்ளேயே ஒரு வரவு, செல வுத் திட்டத்தை உருவாக்கிக் கொள்கிறுன். வீணுன செலவுகளைத் தவிர்க்க முயல்கிறுன். குடும்பத்தைச் சிக்கனமானதாக்க முயல்கிறுன். சிக்கனமான குடும் பமா? என்ற கேள்வி எழலாம். ஆம். செலவுச் சிக் கனம் தான். செலவுச் சிக்கனத்துக்கு அடிப்படை என்ன? அங்கத்தவர் எண்ணிக்கை தானே? அடிப் படைச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது இய லாத காரியம் எனவே அடிப்படை எண்ணிக்கைக் குறைப்பே செலவுச் சுருக்கத்துக்குத் தகுந்த வழி. இப்படி நினைக்கிறுன் மனிதன். எண்ணிக்கையை எதிர் காலத்தில் கூட்டாதிருக்க முயல்வதை குடும் பக் கட்டுப்பாடு என்று கூறலாமா? அவ்வாறு இதைக் குடும்பக் கட்டுப்பாடு என்று ஒத்துக் கொண்டால் குழந்தையே பெற எண்ணுத குடும்பமொன்றை குடும் பக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட குடும்பம் என்று ஒத்துக் கொண்டதாகுமல்லவா?

ஆம் அளவோடு குழந்தைகள் பெறுவதையும் குழந்தை பெறும் காலத்தைத் தள்ளிப் போடுவதுமே குடும்பக்கட்டுப்பாடென ஒத்துக் கொள்ளப்பட்டுள் ளது. குடும்ப வருமானம் ஸ்திரமடையும் வரை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்தி வைத்து குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அதுவரை இடைக்கால தடுப்பு முறைகளைக் கடைப்பிடிக்கலாம். இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டால் நிரந்தரத் தடுப்பு முறைகளைக் கையாளலாம். இவை சர்வசாதாரண மாக மனிதன் ஒருவனுல் தீர்மானிக்கப்பட வேண்டி யது. இத்தீர்மானத்துக்குப் பாதகமான சில சமூக நியதிகள் சில குழுவினரைத் தாக்கவும் செய்கிறது. ஆகஸ்ட் காம்ட் கூறியது போல சமய போர் நிலை இங்குதான் ஆரம்பமாகிறது. குழந்தைகள் ஆண்ட வன் வழங்கும் கொடை அதை அழிக்கவோ, தடுக் கவோ, சமயம் இடம் கொடுக்காது என்ற நம் பிக்கை எம்மில் பலருக்கு இல்லாமலில்லை. ஆனுல் உருவான கருவை அழிப்பது குடும்பக்கட்டுப்பாடல்ல என்பதை இவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும். ஆனுல் தீவிரவாத சமய வாதிகள் உருவாவதைத் தடுப்பதும் தவறென்று வாதிடுவதுண்டு. இவர்கள் காம்ட் கூறிய பகுத்தறிவு - சட்ட நிலைக்கு இறங்கி வர வேண்டும். பகுத்தறிவு கொண்ட மனிதன் நாம் முன்னே குறிப்பிட்ட வரவு செலவு பார்க்கும் அந்தத் தனிமனிதனை விட இன்னும் அதிசமாகச் சிந்திக்கி றுன். வெறுமனே பணத்தை எண்ணிப் பார்த்து காசைச் சேர்த்து வைப்பது மட்டுமல்ல மனித வாழ்வு. இந்த மனிதன் தனது குழந்தைகளுக்கு கல்வி, உணவு, உடை, இடம் என்ற நான்கு வசதிகளை வழங்க முடி யுமா? அவனைத் தேகாரோக்கியமுள்ள முழு மனித னுக வளர்த்தெடுக்க முடியுமா? என்று சிந்திக்கிறுன். அது மட்டுமல்ல தாய் குழந்தைகளைப் பெறும் ஆரோக் கியம் மிக்கவளாக இருக்கிறுளா? அவளால் அந்தக் குழந்தையை முழுமையான ஆரோக்கியம் மிக்க குழந் தையாக ஈன்றெடுக்க முடியுமா? என்றெல்லாம் சிந் திக்கிறுன். ஆசிய நாடுகளைப் பொறுத்த வரை மனைவி என்பவள் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் மகத் தான கடமைக்குரியவள். அவள் குழந்தை பெறுவது மட்டுமல்ல கணவன், மாமன், மாமி, தாய், தந்தை ஆகியோர் கடமைகளையும் கவனிக்க வேண்டிய கடப் பாடுகளுடையவள். அது மட்டுமல்ல கால்நடைகள் வீடு பேணுதல் என்பதும் அவளது கடமைகள். எனவே அவ ளது தேகாரோக்கியம் இங்கு கவனிக்கப்படல் வேண் டும் இது பகுத்தறிவு நிலை. இனி சட்ட நிலையை ஆராய வேண்டும். சமூகவியற் சட்ட திட்டங்கள் தனது குடும்பத்தைத் திட்டமிட என்னென்ன விதிமுறை களை, வழி வகைகளை சட்டரீதியாக அங்கீகரித்துள் ளன என்பதை ஆராய்கிறுன். அதன்படி ஒழுக முயல் கிறுன். இவன் ஒரு படி முன்னேறிய மனிதன். இதே மனிதன் காம்ட் கூறிய மூன்ருவது நிலைக்கு அதா வது அறிவியல்தொழிற்றுவ நிலைக்குத் தள்ளப்படும் போது பகுத்தறிவும், அறிவியல் நுண்மையும் பெற்ற மனிதனுகிறுன். அறிவியல் ரீதியாக சிந்திக்கிறுன். எனது நாட்டின் விஸ்தீரணமென்ன? எனது நாட்டின் முக்கிய வருமானம் என்ன? மக்கட் தொகை என்ன? எத்தனை பாடசாலைகள் உண்டு? ஆளுக்குரிய ஆண்டு வருமானம் என்ன? பூகோள அமைப்பு, இயற்கை வளங்கள், மூலப் பொருட்கள், வேலை வாய்ப்பு இன் னும் 15 வருடங்களில் அவற்றின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி எவ்வாறிருக்கும் என்றெல்லாம் சிந்திக்கிறுன். நாளாந்தம் பத்திரிகைகளில் பட்டினிச் சாவுகள், வறுமை நிலைகள் என்பவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து தன் பகுத்தறிவுக்கேற்றவாறு தன் எதிர் காலத்தைத் திட்டமிடுகிறுன். தொழிற்துறைரீதியா கச் சிந்திக்கிறுன். இவன் சமூகத்திற்கு தனது பங் களிப்பென்ன என்பதில் மிக அக்கறை கொண்டவ னுகிறுன். இவன் தான் சமூகத்தில் அக்கறை கொண்ட நல்ல பிரஜையாகிறுன். ஆனுல் நடைமுறையில் தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியுமே சிந் திக்கிற மனிதர்கள் தான் அதிகம். அது கூட ஓரளவு நாட்டுக்கு நன்மையென்றே கூறலாம். ஒவ்வொரு தனி மனிதனும் தன் சொந்த நலனுக்காகக் குடும் பத்தைச் சுருக்குவது முழுமையாக நாட்டின் சனத் தொகைக்குக் கணிசமான வீழ்ச்சியைத் தரத்தான்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில்

## சனத்தொகை செய்தித் தொடர்பு நிகழ்ச்சித்திட்டம்


குயின்ரஸ் பெர்ணுண்டோ
உதவிச் செயலாளர் (தகவல்)
இராஜாங்க அமைச்சு


உலகிலுள்ள பல்வேறு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் போன்று இலங்கையும் மக்களின் வாழ்க்கையைத் தரமுயர்த்தும் பொருட்டு பல்வேறு சமூக-பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. விவசாயம், சுகாதாரம், கல்வி வீட்டு வசதி போன்ற இன்னோரன்ன துறைகளில் இவ்வபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களுக்கெல்லாம் தடை கல்லாக அமைகிறது மிகவும் பாரதூரமான பிரச்சினையான சனத்தொகை வளர்ச்சி. மட்டுப்படுத்தப்படாத சனத்தொகை வளர்ச்சியினுல் நாட்டுக்குப் பெரும் பிரச்சினைகள் தோன்றுகின்றன என்று இப்போது உணரப்பட்டுள்ளது. கூடுதலான சனத்தொகை நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியைப் பெரிதும் பாதிக்கிறது.

எனவேதான் கடந்த 30 வருட காலமாக எமது நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற எல்லா அரசாங்கங்களும் இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு திட்டமிட்ட பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சனத்தொகை வளர்ச்சியை மட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பலரும் இன்று உணர்ந்துள்ளனர். எனவே தான் இன்று சனத்தொகைத் திட்டங்கள் மிகவும் பாரதூரமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. சனத்தொகைப் பிரச்சினையை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் இணைத்து செயல்படுத்துவது ருசிகரமான ஒரு செய்தி. இதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் சிறந்து விளங்கும். சுகாதார வசதிகள் அபிவிருத்தி அடையும் போஷாக்குத் தன்மை, மற்றும் பொருளாதாரத் துறையும் மேலோங்கும்

அரசாங்கமும் கூடிய அக்கறை சொண்டு அமைச்சுகள் சிலவற்றிலும் குடும்ப சுகாதார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த அங்கீகாரம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. தாமாகவே தமது குடும்பங்களைத் திட்டமிட்ட விரும்புகிறவர்களுக்கு அரசு பல உதவிகளைச் செய்கிறது. சன்மானமும் வழங்குகிறது. சனத்தொகைப் பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்டால் ஒழிய வேலையில்லாத் திண்டாட்டம், உணவுப் பற்றுக்குறை, வீட்டுப் பிரச்சினை ஆகியவற்றை ஒழிக்க முடியாது என்பது அரசின் நோக்கமாகும்.

இலங்கையின் சனத்தொகை நடவடிக்கைகளுக்கு ஐ. நா. ஸ்தாபனங்கள் பரந்த அளவில் உதவிகளை வழங்கி வருகின்றன. சனத்தொகைக் கல்வி, கிராமப் பெண்களுக்குக் கல்வி வசதி, தகவல் வழங்கல், ஆய்வுகள் மேற்கொள்ளுதல் போன்ற இன்னோரன்னவற்றுக்காக பெருமளவில் செலவு செய்கின்றன.

சனத்தொகை அதிகரிப்பால் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் பத்திரிகைகளில் செய்திகள், கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. சனத்தொகைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பத்திரிகைகளும் தம்மாலான பங்கினை ஆற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை எங்கும் பரவலாக வாழும் மக்களுக்கு வானொலி ஒரு சிறந்த தகவல் வழங்கும் சாதனமாக இருந்து வந்துள்ளது.

### சனத்தொகை, குடும்பத்திட்டச் செய்திகள்.

அரசாங்க தனியார் சனத்தொகை குடும்பத்திட்ட நிறுவனங்கள் நடத்தும் நிகழ்ச்சிகள் மூலம் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. இவை பெரும்பாலும்

மூன்று மொழிகளிலுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

உரை, கலந்துரையாடல், பேட்டி, வெளிக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கேள்வி - பதில், நாடகம் போன்றவை மூலம் சனத்தொகை குடும்பத் திட்டச் செய்தி மக்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் போஷாக்கு, சமூக சுகாதாரம், தாய் சேய் சுகாதாரம் பற்றிய நிகழ்ச்சிகளிலும் சனத்தொகை குடும்பத்திட்டச் செய்தி அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் கல்வி அறிவில்லாதவர் மத்தியிலும் வானொலி பிரபல்யம் அடைந்துள்ளது.

திரைப்படம் பார்ப்பது எமது மக்களின் ஒரு முக்கியமான பொழுது போக்கு. நாடெங்கும் பல சினிமா தியேட்டர்கள் உள்ளன. தனியாக சனத்தொகை, குடும்பத்திட்டம் சம்பந்தமான திரைப்படங்கள் திரையிடப்படாத போதிலும் சனத்தொகைச் செய்தியினை எடுத்துக் காட்டும் திரைப்படத் துண்டுகள், சுகாதார செய்திகள் காட்டப்பட்டுவருகின்றன. ஆனால் குறிப்பிட்ட அவையினருக்கான சுகாதாரம், கல்வி சம்பந்தமான திரைப்படங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளித்துள்ளது

கடந்த ஆறுவருடங்களுக்கு முன் இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று முதல் மக்கள் மத்தியில் பல தரப்பட்ட செய்திகளைப் பரப்புவதில் தொலைக்காட்சி பெரும் பங்கு ஆற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தித் தொடர்பு சாதனங்கள் பல இருக்கின்றன. இருந்தும் கையேடுகள், சுவரொட்டிகள், சஞ்சிகைகள் போன்ற அச்சிடப்படும் பிரசுரங்கள் பல தரப்பட்ட மக்கள் மத்தியில் சனத்தொகை, குடும்பத்திட்டத் தகவலைப் பரப்புவதில் பெரும் உதவி செய்துள்ளன. மக்களின் அறிவு பழக்க வழக்கங்கள் கலாசாரங்களுக்கு ஏற்ப இவை வெளியிடப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, பிரசுரங்கள் இவை மூலம் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. அத்துடன் திரைப்படத் துண்டுகள், படங்கள், சுழல் விளக்க அட்டைகள் ஆகியவற்றின் உதவியுடன் குறிப்பிட்ட அவையினர்க்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

சனத்தொகை செய்தியைப் பரப்புவதில் வெகுஜனத்தொடர்பு சாதனங்கள் பெரும் உதவியாக இருக்கும் அதே வேளையில் அவற்றால் சில பாதிப்புகளும் உள்ளன. அது என்னவென்றால் இச்சாதனங்களில் அதிக நாட்டம் கொண்ட மக்கள் வழங்கப்படும் செய்திகளை விட மேலதிக தகவல்களைப் பெற விரும்புகிறார்கள்.

சனத்தொகைத் தகவலைப் பரிமாறிக் கொள்வதில் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பல தரப்பட்ட நன்மைகளை எமக்களிக்கின்ற போதிலும் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் போது இச்சாதனங்களையும் பயன்படுத்துவதால் அதிக நன்மைகளைப் பெறலாம். பெரும்பாலும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது நிகழ்ச்சிகளின் போது இச்சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆட்களுக்கிடையே நேரடி செய்தித் தொடர்பு எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளது என்பதற்கு தாய், சேய் நலன் வைத்தியப் பிரிவு ஆற்றிய சேவை பெற்ற வெற்றி சான்று பகர்கின்றன. முன்னர் சனத்தொகைக் கொள்கை பற்றி அரசு அவ்வளவு தெளிவாக வெளியிடாத வேளையில் வெகுஜன செய்தித் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படவில்லை. அப்போது நாடெங்கும் உள்ளதாய் சேய் சுகாதார சிகிச்சை நிலையங்கள் மட்டுமே மக்களுக்கு இத்துறையில் தகவல் வழங்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றன.

சனத்தொகை செய்தியினை மக்களிடையே நேரடியாக எடுத்துச் சென்று பரப்புவதற்கென்றே அண்மைக்காலத்தில் இலங்கையில் கிராமிய சுகாதார தொண்டர்கள் விரிவுபடுத்தப்பட்டனர். இவர்கள் மூலமாக கிராமிய தகவல் செய்தி தொடர்பு இலகுவாக்கப்பட்டது அதுமட்டுமல்ல சனத்தொகையில் எண்பது விகிதமானவர்கள் வாழும் கிராமியப் பிரதேசங்களில் தகவல் சேகரிப்பு, சனத்தொகை கல்விவிருத்தி, ஊக்குவிப்புகளுடன் மக்களுக்கிடையிலான நேரடி செய்தித் தொடர்பு பரிமாற்றத்துக்கு பெரிதும் ஊக்குவிப்பாயமைந்தது எனலாம்.

இது கிராமிய மக்களுடன் நேரடி கருத்துப்பரிமாற்றத்துக்கு மட்டுமல்ல காலத்துக்கு காலம் சனத்தொகைபிரச்சினை தொடர்பாக எழும் சந்தேகங்கள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு உடனுக்குடன் சுகாதாரத் தொண்டர்கள் மூலமாகப் பரிகாரம் காண்பதற்கும் வழிவகுத்துள்ளது.

# சனத்தொகை அறிக்கை

### ● உலக சனத்தொகை

உலக சனத்தொகை தற்சமயம் 1.7 வீதமாக அதிகரித்துள்ளது என்று ஐ. நா புள்ளி விபர அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

ஆபிரிக்காவிலேயே சனத்தொகை அதிகமாக அதாவது 3 வீதம் அதிகரித்தது என்றும் தென் அமெரிக்காவில் 2.3 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆசியாவின் சனத்தொகை 1.7 வீதமாகவும் தென் அமெரிக்காவில் 1.5 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாக் கண்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு சனத்தொகை வளர்ச்சியுற்றது என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### ● மலேஷியாவின் சனத்தொகைக் கொள்கை

மலேஷியாவின் சனத்தொகைக் கொள்கையில் புரட்சிகரமான மாற்றம் செய்யப்பட உள்ளது. அதாவது இந்நாட்டில் கடந்த 18 ஆண்டுகளாக சனத்தொகையைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட சனத்தொகை மூலம் பாரிய கைத்தொழில் நிறுவனங்களை நடத்துவது கஷ்டமென்றும், மலேஷியாவில் 7 கோடி (70 மில்லியன்) மக்களைக் கொண்ட சனத்தொகை இருப்பது அவசியமென்றும் பிரதமர் டாக்டர். மஹதிர் முகம்மத் தெரிவித்துள்ளார். 7 கோடி சனத்தொகை என்ற கொள்கைத் திட்டம் 1985ல் அங்கீகரிக்கப்பட்டது.

மலேஷியாவில் இதுவரை இயங்கிய தேசிய குடும்பத்திட்டச் சபை இனிமேல் தேசிய சனத்தொகை குடும்ப நல சபை எனப் பெயர் மாற்றம் பெறும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது

### ● ஈரானில் புள்ளிவிபரக் கணக்கெடுப்பு

ஈரான் இஸ்லாமியக் குடியரசு இவ்வருடம் சனத்தொகை, வீட்டு வசதி சம்பந்தமான புள்ளி விபரங்களைப் பெற நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

ஈரான் புள்ளி விபர நிலையமே இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

### ● ஜப்பானில் பிறப்பு வீதம் வீழ்ச்சி

1973ம் ஆண்டில் ஜப்பானின் பிறப்புவீதம் ஆயிரத்துக்கு 12.7 ஆகக் குறைந்தது. ஜப்பானின் ''மனிச்சி'' என்னும் தினசரிப் பத்திரிகை குடும்பத்திட்டம் பற்றி 1984 மேமாதம் நடத்திய ஆய்வில் ஜப்பானின் பிறப்பு வீதம் இப்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. 25–35 வயதுக்கிடைப்பட்ட தாய்மார் மூன்று குழந்தைகள் கொண்ட அளவான குடும்பங்களையே விரும்புவதாகவும் அறியப்படுகிறது.

அண்மைக் காலங்களில் ஜப்பானியப் பெண்மணிகளும் பல துறைகளிலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதால் திருமண வயது இப்போது முன்னைய ஆண்டுகளை விட பெருமளவு உயர்ந்துள்ளது.

### ● சனத்தொகை நடவடிக்கைகள் பெரும் வெற்றி

சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை நடவடிக்கைகளின் வெற்றியினாலும், பெரும்பான்மையான பிள்ளைகள் தொடர்ந்து கல்வி பெறுவதனாலும் நாட்டின் தொழிலாளர் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது என அரசாங்க தொழில்வள கமிட்டி தெரிவித்துள்ளது.

1970ம் ஆண்டில் 15–19 வயதுக்கிடைப்பட்டவர்களில் 240,000 ஆக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை கடந்த வருடம் 235,000 ஆகக் குறைந்தது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

தற்சமய நிலை நீடிக்குமாயின் 1990ம் வருடம் வரை தொழிலாளர் 1.8 வீதமாக மட்டுமே அதிகரிக்கக் கூடியதாக இருக்குமெனவும், 1995 ம் ஆண்டிலிருந்து நூற்றாண்டு முடியும் வரை 0 5 வீதத்தால் மட்டுமே தொழிலாளர் வளம் அதிகரிக்கும் என்றும் பேசப்படுகிறது. எனவே ஓய்வு பெற்ற தொழிலாளர் உதவிக்கு வந்தால் நல்லதெனக் கூறப்படுகிறது.

சிங்கப்பூரில் தொழிலாளர்களில் ஏறத்தாழ 10 லட்சம் பேர் வெளிநாட்டவர்கள் என்றும் இவர்கள் வீட்டு வேலைக்காரர்களாகவும் கட்டிட நிர்மாண வேலைகளில் ஈடுபடுகிறவர்களாகவும் உள்ளனர் மற்றும் கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் 1983 முதல் படிப்படியாக வெளியேற்றப்படுகின்றனர். மலேஷியா, இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், இந்தோனேஷியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், வடகொரியா, ஹொங்கொங், தைவான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் சிங்கப்பூரில் வேலை பார்க்கின்றனர்.

# சனப்பெருக்க வேகத்துக்கு பசுமைப் புரட்சி பரிகாரமாகுமா?

அன்ரனி பெர்னாண்டோ

இலங்கையின் சனத்தொகை 1881ம் ஆண்டில் 27.59 லட்சமாக இருந்தது நூறு வருடங்களில் 1981ம் ஆண்டு இது 1.48 கோடியாக அதிகரித்தது. இன்று நாட்டின் சனத்தொகை ஒன்றரைக் கோடியைத் தாண்டி விட்டது என்பதை மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இவ்விதம் துரிதமாக அதிகரித்து வரும் இலங்கையின் சனத்தொகை 1991ம் ஆண்டில் இரண்டு கோடியைத் தாண்டி 2001ம் ஆண்டில் இரண்டரைக் கோடியை எட்டி விடும் என்று கணக்கிட்டு உள்ளனர்.

சனத்தொகைப் பெருக்கம், இந்த அபரிமிதமான வேகம் காரணமாக இன்று ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்தப் பூதாகரப் பிரச்சினை இலங்கையை மட்டுமன்றி உலகம் முழுவதையுமே பயமுறுத்துகிறது.

உலகின் சனத்தொகை கடந்த வருடம் 490 கோடியைத் தாண்டியுள்ளது. இந்த மக்களில் ஒரு பெரும் பகுதியினர் 275 கோடி ஆசியாக் கண்டத்தில் வாழ்கின்றனர். ஐரோப்பாக் கண்டத்தில் 69 கோடி மக்களும், ஆபிரிக்காக் கண்டத்தில் 51 கோடி மக்களும், வட அமெரிக்காக் கண்டத்தில் 39 கோடி மக்களும், தென் அமெரிக்காக் கண்டத்தில் 26 கோடி மக்களும், ஆஸ்திரேலியாவில் 15 கோடி மக்களும் உள்ளனர்.

வருடாந்தம் 1.7 சதவீதத்தால் உலகின் சனத்தொகை அதிகரித்து வருகிறது. இதன்படி 2021ம் ஆண்டு உலகில் வாழும் மக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகி விடும்.

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் சனத்தொகை என்று கூறும்போது அது அந்த நாட்டிலோ, பிரதேசத்திலோ வசிக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கிறது.

காலத்துக்கு காலம் இந்தச் சனத்தொகையில் மாற்றம் உண்டாகும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இயற்கையான சனத்தொகைப் பெருக்கம். இரண்டு இடம் பெயர்தல் அல்லது குடியேற்றம்.

பெரும்பாலான நாடுகளில் மரணங்களை விடப் பிறப்புகள் தான் அதிகம். எனவே அந்நாடுகளின் சனத்தொகை அதிகரிக்கிறது. பிறந்தோரின் எண்ணிக்கையில் இருந்து இறந்தோரின் எண்ணிக்கையைக் கழித்ததும் அதிகரித்த சனத்தொகையை அறிய முடிகிறது.

பெருந்தொகையான மக்கள் ஒரு பிரதேசத்தை விட்டு வெளியேறும் போது அங்கு சனத்தொகை வீழ்ச்சியடைகிறது. வெளியேறிய மக்கள் போய்ப் புதிதாகக் குடியேறும் பகுதியில் சனத்தொகை பெருகுகிறது.

ஆசியாவில் சனத்தொகை வெகுவாக அதிகரிக்கக் காரணம் மரண விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே ஆகும். பஞ்சம், பட்டினி, தொற்று நோய் முதலானவை குறைந்ததால் ஆசியாவில் மரண விகிதம் வீழ்ச்சியடைந்தது. பின்னர் சிறந்த சுகாதார நடவடிக்கைகளால் இந்த மரண விகிதம் குறைந்தது

பல் நெடுங்காலமாக பிறப்பு விகிதம் அதிகமாக இருந்தும் சனப் பெருக்க வேகம் குறைவாகவே காணப்பட்டது. அந்நாட்களில் மரண விகிதமும் அதிகமாக இருந்ததே இதற்குக் காரணம்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் 1700ம் ஆண்டுகளிலும், 1800ம் ஆண்டுகளிலும் மக்களின் வாழ்க்கை நிலை அபிவிருத்தி அடைந்ததாலும் பல்வேறு நோய்கள் பரவுவது தடைப்பட்டதாலும் மரண விகிதம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதனால் சனப் பெருக்க வேகம் துரிதமடைந்தது.

( 15-ம் பக்கம் பார்க்க )

# இலங்கையில்

# பிறப்பு வீதம் வீழ்ச்சி

இலங்கையிலும், இந்தியாவின் தென் மாநிலமான கேரளாவிலும் அண்மைக் காலத்தில் சனத்தொகை வளர்ச்சி வீதம் வெகுவாகக் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்துள்ளது என உலக வங்கியின் 1984ம் ஆண்டின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 1960-1974 வருடங்களுக்கிடையில் ஆயிரத்திற்கு 37 பிறப்பு வீதமாக இருந்த வளர்ச்சி வீதம் 27 வீதமாகக் குறைந்துள்ளது என்றும் கேரளாவின் சில பகுதிகளில் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 22 ஆகவும், அதற்குக் குறைவாகவும் வீழ்ச்சியடைந்தது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்கள் மத்தியிலேயே இத்தகைய பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விஷயத்தை மையமாகக் கொண்டே உலக வங்கி இந்த இரு நாடுகளிலும் ஆய்வு ஒன்றை நடத்த முற்பட்டது.

இலங்கை, இந்திய அரசாங்கங்கள் மற்றும் சனத்தொகை நடவடிக்கைகளுக்கான ஐ. நா. நிதி ஆகியவற்றின் ஒத்துழைப்புடனேயே உலக வங்கி இவ் ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

கேரளா, பெங்களூர் பகுதிகளில் சில ஸ்தாபனங்களும். இலங்கையின் குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களமும் இவ் ஆய்வு வேலைகளில் ஈடுபட்டன. இலங்கையில் 5000 குடும்பங்களில் இருந்தும், கேரளாவில் 3000 குடும்பங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து 1960-74 ஆண்டுக் காலத்தில் பிறப்பு வீதம் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்தது என்று கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் திருமண வயது உயர்த்தப்பட்டதே என்று அறியக் கூடியதாக இருந்தது. மேலும் பெண்கள் உயர் கல்வி மற்றும் பல தரப்பட்ட தொழில் துறைகளில் ஈடுபட்டதும் ஒரு காரணமாகும்.

கர்நாடகப் பகுதியில் பிள்ளை பெறும் வயதில் உள்ள தம்பதியர்களில் 91 வீதமானவர்கள் சத்திர சிகிச்சை செய்து தமது குடும்பங்களைத் திட்டமிட்டுள்ளார்கள் என்றும் இலங்கையில் குடும்பத்திட்டமுறைகளைப் பின்பற்றுபவர்களில் 42 வீதமானவர்கள் சத்திர சிகிச்சை செய்திருந்தனர் என்றும் ஆய்வின் போது அறியக் கூடியதாக இருந்தது என்று உலக வங்கி கருத்து தெரிவித்துள்ளது.

---

சனப்பெருக்க வேகத்துக்கு ..........

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகெங்கிலும் சனப்பெருக்க வேகம் அதிகரித்தது. என்றாலும், இலங்கை முதலான வளரும் நாடுகளில் தான் இந்த வேகம் மிகவும் அதிகமானதாக இருந்தது.

இந்த வளரும் நாடுகள் இப்படியான சனப்பெருக்க வேகத்துக்கு ஈடுகொடுக்க இயலாமல் தவிக்க நேர்ந்துள்ளது.

உலகில் மக்கள் அனைவரும் நலமாக வாழ வேண்டுமானால் சனப் பெருக்க வேகத்துக்குச் சரி நிகர் சமமான உணவு உற்பத்தி வேகமும் இருக்க வேண்டும். இன்றைய சனப்பெருக்க வேகத்தை அவதானிக்கும் போது விரைவில் உலகம் மக்களால் நிறைந்து உணவுத் தட்டுப்பாடு காரணமாக அவதியுற நேரும் என்று பெரும்பாலான நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சனப்பெருக்க வேகத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் உலகில் பஞ்சம், பட்டினி, போர் முதலான பேரழிவுகள் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாக மாறிவிடும் என்று நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர்.

நவீன விவசாய முறைகள் அறிமுகமாகி வரும் இந்தக் கால கட்டத்தில் இதற்கெல்லாம் அஞ்சத் தேவையில்லையென்றும், பசுமைப் புரட்சி மூலம் வெற்றி காணலாம் எனவும் வாதாடி நம்பிக்கை ஒளியைப் பரப்பும் நிபுணர்களும் உள்ளனர்.

உணவுக்கும், மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கும் பயங்கரத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் சனப்பெருக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று பலரும் நம்புகின்றனர். மரண விகிதத்தைப் பிறப்பு விகிதம் தாண்டி விடாமல் தடுக்க வேண்டும் என்பது இவர்களின் நிலைப்பாடு.

கண், மண் தெரியாமல் பெருகி வரும் சனத்தொகைக்கு பசுமைப் புரட்சி பரிகாரமாகுமா? என்ற கேள்வி தான் இன்றைய நிலைமைகளை ஆராய்வோரின் காதுகளில் தொடர்ந்து எதிரொலிக்கிறது.

# வறிய நாடுகளிலேயே சனத்தொகை அதிகரிப்பு

திட்டமிடப்படாத சனத்தொகை வளர்ச்சி உலகில் ஏற்கெனவே பிறந்துள்ள கோடிக்கணக்கான மக்களினதும், பிறக்கவுள்ள கோடிக்கணக்கான மக்களினதும் வாழ்க்கையைப் பாதிக்கும் தன்மை கொண்டது. இந்நூற்றுண்டின் சனத்தொகை வளர்ச்சியின் அளவை உற்று நோக்கினுல் இப்பிரச்சினையின் அபாயத்தை ஒவ்வொருவரும் நன்கு உணர்வர். சனத்தொகை வளர்ச்சியின் பயங்கரம் என்னவென்றுல் கூடுதலான மக்களைத் தாங்க முடியாத, சக்தியற்ற வறிய நாடுகளிலேயே 80 வீதமான சனத்தொகை வளர்ச்சி காணப்படுகிறது. ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற அதிக சனத்தொகையைத் தாங்க முடியாத, கூடுதலான மக்களைப் பராமரிக்க இயலாத நாடுகளிலேயே இத்தகைய 80 வீத வளர்ச்சி காணப்பட்டது.

இலங்கையில் வசதி படைத்த குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ள அதே நேரத்தில் வசதி குறைந்த குடும்பங்களிலேயே அதிகப்படியான எண்ணிக்கையில் குழந்தைகள் உள்ளனர். அதிகப் படியான குழந்தைகளைப் பெற்று பராமரிக்கக்கூடிய வசதி படைத்தவர்கள் குடும்பத் திட்ட நூல்கள், கையேடுகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் மூலம் தமது குடும்பங்களைத் திட்டமிட்டுக்கொள்கின்றனர். சகல வழிகளிலும் வசதியற்ற, படிப்பறிவு குறைந்த, குறைந்த வருமானமுள்ள, வறிய குடும்பங்களில்தான் அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன. இதனுல் அவர்களை நல்ல முறையில் பராமரிக்க இயலாது போய் விடுகிறது.

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானுல், மக்கள் வசதியாக வாழ வேண்டுமானுல், அதாவது நல்ல முறையில் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்று அவர்களுக்குப் போஷாக்கு நிறைந்த உணவு, உடை, வசிப்பதற்கு வசதியான வீடு. கல்வி ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமானுல் சனத்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அதாவது குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டுமானுல் விஞ்ஞான ரீதியிலான குடும்பத்திட்ட முறைகளை அனுசரிக்க வேண்டியது அவசியமாகும். இன்றைய நிலையில் சனத்தொகை அதிகரித்துக் கொண்டு போனுல் மக்கள் பட்டினியால் இறக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அப்படி எமது சனத்தொகை தொடர்ந்தும் இன்றைய வேகத்தில் அதிகரிக்குமாயின் மனிதனின் நல்வாழ்வுக்குத் தேவைப்படும் சுகாதார வசதிகள், கல்வி. தொழில், மற்றும் அத்தியாவசிய தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு அபாயகரமான நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

கட்டுப்பாடற்ற முறையில் வளர்ந்து கொண்டிருக்கும் சனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அவசரமானதும், அவசியமானதாகவும் உள்ளது. இந்தப் பொறுப்பை நாட்டிலுள்ள மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடனேயே நிறைவேற்ற முடியும்.

## கருத்தரிப்பைத் தடுக்க 'நோபிளான்ட்' முறை

குடும்பத்திட்ட முறைகளில் 'நோபிளான்ட்' என்றழைக்கப்படும் நவீன முறை ஒன்று இலங்கையில் இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 5 வருடங்களுக்கு இந்த முறையின் மூலம் கருத்தரியாமல் இருக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை குடும்பத்திட்டச் சங்கம் 48 பெண்களிடையே இந்த முறையைப் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தி உள்ளது. வேறு நடை முறைகளைப் போல இந்த முறையைக் கையாளும் பெண்களின் உடலில் பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட மாட்டாது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் மேற் கையில் குளிசை ஒன்றை வைத்து விடுவதன் மூலம் இந்த முறை மேற்கொள்ளப்படுகின்றது. இங்கிலாந்து, அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர், இந்தியா, போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்கள் இந்த நவீன முறையைத் தற்போது பயன்படுத்தி வருவதாகவும் இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பாடசாலைகளில் சனத்தொகைக் கல்வி



புவியியல், பொருளாதாரம் ஆகியவற்றுடன் சனத்தொகை சம்பந்தமான விடயங்களும் தொடர்புடையதாக இருந்து வந்துள்ளன. 1960ம் ஆண்டின் ஆரம்பத்தில் சனத்தொகைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வறிய நாடுகளான ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் சனத்தொகை எதிர்பாராத அளவு வளர்ச்சி அடைந்தது. எனவே இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு குடும்பத்திட்டத்தை விட மக்களுக்கு சனத்தொகைப் பிரச்சினை பற்றி விளக்க வேண்டுமென்று உணரப்பட்டது. சனத்தொகைக் கல்வி மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கருதப்பட்டது. இத்திட்டத்திற்கமைய செயற்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கை பாடசாலைகளில் சனத்தொகைக் கல்வி 1974ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்துறையில் கல்வி அமைச்சு காலடி எடுத்து வைத்த போது சனத்தொகை, குடும்பத்திட்டம் என்பன தீர்வு காண முடியாத விடயங்களாக இருந்தன.

குடும்ப அளவைக் குறைக்க குடும்பத்திட்டம் பற்றியே போதிக்காது சனத்தொகை வளர்ச்சியால் உண்டாகும் விளைவுகளைப் பற்றியே விளக்குவது என்று கல்வி வட்டாரங்கள் தீர்மானித்து செயற்பட்டு வந்தன. மாணவர்கள் மத்தியில் கல்விமூலம் சனத்தொகைப் பிரச்சினையை விளக்கச் செய்வது கால மெடுக்கும் விஷயமாகவும் இருந்தது. மாணவர்களுக்குச் சனத்தொகைக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் தமது சொந்த வாழ்க்கையை வளம் பெறச் செய்வதுடன், சிறந்த பிரஜைகளாகக் கடமையாற்றி சமூகத்துக்கும், நாட்டுக்கும் தொண்டு புரிபவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

( 20-ம் பக்கம் பார்க்க )

# உலக சனத்தொகை
# அடுத்த ஆண்டில் 500 கோடியாக உயரும்!

1985 ம் ஆண்டு உலக ஜனத்தொகை 490 கோடியாக இருந்தது. அதே வருடம் ஜனத்தொகையில் எட்டரைக் கோடி அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நிறுவனமொன்றின் அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987 ம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த ஜனத்தொகை 500 கோடியாக உயரும். இந்த நூற்றுண்டின் இறுதியில் இது 600 கோடியாக உயரும்.

உலக ஜனத்தொகை வளர்ச்சி 1970 ம் ஆண்டு இரண்டு சதவீதம் என்ற நிலையிலிருந்து கடந்த வருடம் 1.7 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள ஜனத்தொகையில் 40 சதவீதமானவர்கள் 15 வயதிற்குக் குறைந்தவர்கள். அமெரிக்காவில் 22 சதவீதத்தினர் பதினைந்து வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களாவர்.

---

**மனிதனும் மக்கட்...**


( 10-ம் பக்கத் தொடர்...... )

செய்யும். சமூகம் என்ற பொதுவான சொல் பல் வேறு துறைகளோடும் பின்னிப் பிணைந்திருக்கிறது.


நாம் முன் குறிப்பிட்ட அந்தப் பகுத்தறிவு- அறிவியல் மனிதன் காம்ட் குறிப்பிட்ட தொழிற்றுறை நிலையை நோக்குவானுயின் தொழிற்துறை வளர்ச்சி காரணமாக நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் ஜனத்தொகையையும் அதன் மூலம் ஏற்படும் நெரிசல், சுகாதாரக் கேடுகள், ஒழுக்க இழப்புக்கள் ஆகிய வற்றைக் கவனிக்கலாம். முன்னைய நகரங்களிலிருந்து தற்கால நகரங்களை வேற்றுமைப் படுத்திக் காட்டுகின்ற முக்கியமான பண்பு தொழிற்றுறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தான். தொழிற் புரட்சிக்குப் பிறகு நகரங்களின் வேகமான வளர்ச்சிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் அதிகரித்து வரும் நகர மயமாக்கல் என்ற தன்மைக்கும் இதுவே காரணமாகிறது. இங்கிலாந்தின் லண்டன் மாநகர் சென்ற நூற்றுண்டில் பிரமிக்கும்படி வளர்ந்திருக்கிறது. 1801ம் ஆண்டு 73,000 மக்களைக் கொண்டிருந்த பர்மிங்ஹாம் என்ற நகரம் 1945ம் ஆண்டு 995,000 மக்களையும், லீட்ஸ நகரம் 53,000 இலிருந்து 448,000 வரையும், பிரிஸ்டல் 63,000 இலிருந்து 441,000 வரையும் ஷெ. பீல்ட் 46,000 இலிருந்து 474,000 வரையும் உயர்ந்திருந்தது. இன்றைய நிலையில் இவை இரண்டு மடங்கு உயர்ந்திருக்கக்கூடும். அதேபோல இந்தியாவின் அகமதாபாத் நகரம் 60 ஆண்டுக்குள் 788,373 வரையும், மக்களேயின்றியிருந்த ஜாம்ஷெட்பூர் 218,162 பேரையும் கொண்டு வளர்ந்திருப்பதும் தொழிற்றுறை வளர்ச்சியில் ஏற்படும் சனச்செறிவைக் காட்டுகிறது.

இவ்வாறுன சூழ்நிலையில் வாழும் மனிதன் வீட்டு வசதி, சூழல், சுகாதாரம், நீர்வசதி போன்ற பல யதார்த்தங்களைத் தன் நெஞ்சில் நிறுத்த வேண்டிய வனுகிறுன்.

எனவே மனித வாழ்க்கை என்பது நாம் நினைப்பது போல முடிவு எடுத்துவிடக்கூடிய தொன்றன்று. அந்த முடிவுகளை, வசதிகளை நிர்ணயிக்கப் பல காரணிகள் நம்மையும் மீறிச் செயற்படுகின்றன. எனவே மனிதன் என்பவன் விலங்காக வாழ முடியாது. அவன் மனிதனுக வாழ முற்பட வேண்டும். மனிதன் மனிதனுக வாழ அவன் சூழலை நிர்ணயிக்கும் காரணிகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறு காரணிகளைக் கருத்திற் கொள்ளும் மனிதன் தனது வாழ்வை தனது குடும்பத்தைத் திட்டமிட்டுக் கொள்கிறுன். இத்திட்டமிடலே இன்று மக்கட் தொகையியலின் மகத்தான தேவையாகிறது.



சனத்தொகைப் பிரச்சினை பற்றிய விளக்க வகுப்பு



தாய்மாருடன் சனத்தொகை பற்றிய கலந்துரையாடல்

# சனத்தொகை வளர்சியும் அரசின் சனத்தொகைக் கொள்கையும்

— செந்திரு ஜெகதீஸ்வரன்

நாட்டின் சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப் படுத்தாவிட்டால் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும் போதெல்லாம் அவை பயனற்றதாகி விடும். சனத்தொகை வளர்ச்சியடைந்து கொண்டு போகும்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் விஸ்வ ரூபம் எடுக்கிறது. நாடு அபிவிருத்தியை நோக்கிக் காலடி எடுத்து வைப்பதற்கு திட்டமிடப்படாத சனத் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது அவசிய மாகிறது. சனத்தொகைப் பிரச்சினை ஒரு பொதுப் பிரச்சினையாக இருப்பதனால் இப்பிரச்சினையைத் தீர்ப் பது ஒவ்வொரு மக்களுடைய பொறுப்புமாகும்.

நாடு அபிவிருத்தியடையும் போது சனத்தொகை யும் வளர்ச்சியடைந்து கொண்டு போனால் நாட்டின் அபிவிருத்தி முயற்சிகள். பெறுபேறுகள் யாவும் சனத் தொகைப் பெருக்கத்தினால் முறியடிக்கப்பட்டு விடும். சனத்தொகை வளர்ச்சியடைய அடைய மனிதனு டைய அன்றாட அத்தியாவசிய தேவைகளும் அதி கரிக்கிறது.

அரசின் சனத்தொகைக் கொள்கையைப் பொறுத்த வரையில் சனத்தொகை அதிகரிப்பைக் குறைப்பதில் அரசும் அக்கறை கொண்டுள்ளது. சுய மாகவே விரும்பி பிறப்புக் கட்டுப்பாட்டை ஏற்படுத் துவோருக்கு அரசு நன்கொடைப் பணம் வழங்குகி றது. இந்தக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு பெண் அறுவைச் சிகிச்சையின் பின் ஏழு நாட்களும், ஆண் அறுவைச் சிகிச்சையின் பின் மூன்று நாட்களும் லீவு வழங்கப்படுகிறது. மேலதிக லீவுகளாக இந்த லீவுகள் வழங்கப்படும். அறுவைச் சிகிச்சையை நடத்தும் டாக்டர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பெரிய குடும்பத்தி னர் என்பதற்காக வருமானவரி செலுத்துதலில் எந் தச் சலுகையும் வழங்கப்படுவதில்லை.

இலங்கையின் சனத்தொகைக் கொள்கையானது கட்டாயப்படுத்தப்படுவது அல்ல, ஒரு தூண்டல் முயற்சியே ஆகும். ஏனைய நாடுகளில் உள்ள நிலை யைப் பொறுத்த வரையில் உதாரணமாக சிங்கப் பூரில் இந்த நன்கொடை கொடுப்பனவைப் பொறுத்த வரையில் நிலைமை சாதகமானதாகவும், பாதகமான தாகவும் காணப்படுகிறது. இரண்டாவது பிள்ளைக் குப் பின் ஆஸ்பத்திரிக் கட்டணம் அதிகரிக்கும். மூன் றாவது பிள்ளைக்குப் பின் மகப்பேற்று விடுமுறை கொடுக்கப்படுவதில்லை. சிறிய குடும்பங்களின் பிள்ளை களுக்கும், அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பெற்றோரின் பிள்ளைகளுக்கும் விசேடமாகப் பாட சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

குடும்பத்தைத் திட்டமிடுவது நாட்டைத் திட்ட மிடுவதில் ஓர் அங்கமாகும். ஏனென்றால் சனத் தொகைப் பெருக்கம் திட்டமிடப் பட்டால் தான் நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளால் பலன் கிடைக் கும். சனத்தொகைப் பெருக்கமானது இன்றே தீர்க் கப்பட்ட வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும். அதி கரிக்கும் சனத்தொகை எதிர்காலப் பிரச்சினையல்ல அது இன்றே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என் பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அப்பிரச்சினையில் ஒவ்வொருவரும் பங்கெடுக்க வேண்டும். ஏனென்றால் இச்சனத்தொகைப் பெருக்கம் தினமும் மிகவும் துரித மாக வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது.

சனத்தொகையைத் திட்டமிடுவது உண்மையில் முழுமையாக ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் உரியதாகும்

---

( 17-ம் பக்கத் தொடர் )

ஒரு நெருக்கமான, வளங்கள் குறைந்த உலகில் மக்களை வாழத் தயார் பண்ணுவதே முக்கியமான குறிக்கோள். வளங்களைப் பேணுவது கவனமாக உப யோகிப்பது பற்றி சனத்தொகைக் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்டதுடன் சாதாரண சனத்தொகை விட யங்களைப் புரிய வைப்பதுமே இதன் நோக்கமாக இருந்தது.

உயர் வகுப்புகளில் சமூகக் கல்வி, விஞ்ஞானம், சுகாதாரம் ஆகிய பாடங்களில் சனத்தொகைக் கல்வி யும் உட்புகுத்தப்பட்டது. சனத்தொகை நடவடிக்கை களுக்கான ஐ. நா நிதியம் சனத்தொகைக் கல்விப் போதனைக்கு தேவைப்பட்ட உபகரணங்களை வழங்கி யது.

# திட்டமிட்டு வாழ
# தினமும் பழகிடுவோம்

திட்டமிட்டு நாம்உழைத்து தினமும் இந்நாட்டை
கட்டி எழுப்ப கடமைப் பட்டுள்ளோம்
பெற்றெடுத்த தாயை பேணிக் காத்துவரல்
கற்றவர்கள் செய்யும் கடமை ஆகையினுல்
எப்போதும் தாயை இனிநாங்கள் நேசிப்போம்
செப்பமாய் அவள்உயர செழுமையுற்று நிதம்வளர
ஒப்பி பணிசெய்ய உறுதி எடுத்திடுவோம்!

பொன்விளையும் இந்தப் பூமியிலே பிறந்தவர் நாம்
இன்னுமா பிறர்தயவை எதிர்பார்த்து ஏங்குவது
கொட்டும் மழையினிலும் கொதிக்கும் வெயிலினிலும்
பட்டினி யோடு பரிதவித்து அழுவோரை
கட்டுப் படுத்தி கவலைகளை ஓட்டுதற்கு
திட்டமிடல் ஒன்றே தேவை ஆகையினுல்
திட்டமிட்டு வாழ தினமும் பழகிடுவோம்!

பெற்றெடுப்போம் அளவாய் பிள்ளைகளை அவர்களினை
கற்றவராய், சீரியராய் கனிவாக நாம் வளர்ப்போம்!
அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சுதான்
அளவோடு பெற்று ஆனந்தம் நாம் பெறுவோம்!
பிள்ளைகளே எமது பெருஞ்செல்வம் அவர்களே
தொல்லையென வந்தால் தொலையும் நிம்மதிதான்
என்றும் மகிழ்வாய் இருப்பதற்கும் பிள்ளைகளை
நன்ருய் இவ்வுலகில் நடமாட வைப்பதற்கும்
திட்டமிடல் ஒன்றே தேவை ஆகையினுல்,
திட்டமிட்டு வாழ தினமும் பழகிடுவோம்!

— அன்பு முகைதீன்

# இலங்கை சனத்தொகை விபரம்

## (குடிசன மதிப்பீடு 1981)

1. முழு சனத்தொகை (1981) 14.85 மில்லியன்
2. வயது அடிப்படையில் சனத்தொகை
   ( மொத்த வீதம் )
   1. 0-14, 35.3%
   2. 15-19 10.8%
   3. 20-21 10.2%
   4. 60-70 6.6%
3. சனத்தொகை ( நகர்ப்புறம் ) 21.5%
   ( கிராமப் புறம் ) 78.49%
4. பிறப்பு விகிதம் ( 1000 க்கு ) 28.0
5. இறப்பு விகிதம் ( 1000 க்கு ) 6,1
6. இயற்கை வளர்ச்சி விகிதம் 2.1
7. வீத அதிகரிப்பு 17.0
8. வருடாந்த வளர்ச்சி விகிதம் 1 7
9. சிசு மரண விகிதம் ( 1980 ) 34.4
   ( உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுக்கு )
10. பிரசவத்தின் போது தாயின் இறப்பு (1980) 0.6
    ( பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு )
11. கல்வி அறிவு விகிதம் தேசிய மொத்தம் 86.5
    ஆண் 90.5
    பெண் 82.4
12. தங்கிவாழும் விகிதாசாரம் (100 க்கு) 65 6
13. தாய்-சேய் விகிதாசாரம் (1000 க்கு) 49
14. நடுத்தர வயது (வருடங்கள்) 21.4
15. சனத்தொகை அடர்த்தி (சது. கி, மீ. க்கு 550
16. ஆயுட்காலம் ஆண் 66.1 (1979)
    - பெண் 70.2 (1979)
17. பாலியல் விகிதாசாரம் (100 குடும்பங்களுக்கு) 104
18. சராசரி தேசிய உற்பத்தி
    நிலையான விலைகள் (1975) : 2697, 4ரூ (1984)
    நடப்பாண்டு விலைகள் 9241 ரூ (1984)

# சனத்தொகைப் புள்ளி விபரங்கள்

| வருடம் | | சனத்தொகை (000) | 1,000 த்துக்கான சனத்தொகை பிறப்பு வீதம் | இறப்பு வீதம் | அதிகரிப்பு வீதம் | ஆயிரம் பிறப்பிற்கு தாய் இறப்பு வீதம் | சேய் இறப்பு வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1977 | ... | 13,942 | 27.9 | 7 4 | 20.5 | 1.0 | 42.4 |
| 1978 | ... | 14,190 | 28.5 | 6.6 | 21.9 | 0 8 | 37.1 |
| 1979 | ... | 14,472 | 28.9 | 6.5 | 22.4 | 0.8 | 37.7 |
| 1980 | ... | 14,747 | 28.4 | 6.2 | 22.2 | 0.9 | 34.4 |
| 1981 | ... | 14,988 | 28.0 | 6.0 | 22.0 | | |
| 1982 | ... | 15,189 | 26.8 | 6.1 | 20.7 | | |

பிறப்பில் ஆயுட்கால எதிர்பார்ப்பு

வருடம்

| | 1920–22 | 1946 | 1953 | 1962 | 1967 | 1971 | 1979 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 32.7 | 43.9 | 58.8 | 61.9 | 64.8 | 64.2 | 66.1 |
| பெண் | 20.7 | 41.6 | 57.5 | 61.4 | 66.9 | 67.1 | 70.2 |

பாலியலும் கல்வி அறிவும்

( 10-ம் அதற்கு மேற்பட்ட வயதுடையோரும் )

கல்வி அறிவு பெற்றவர்கள் விகிதத்தில்

| | | | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1971 | ... | ... ... | 85.6 | 70.9 | 78.5 |
| 1981 | ... | ... ... | 90.5 | 82.4 | 86.5 |

சனத்தொகை முற்கணிப்பு

(ஆயிரத்திற்கு)

| | | 1991 மொத்தம் | ஆண் | பெண் | 2001 மொ. | ஆண் | பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் | | 20,009 | 10,105 | 9,904 | 24,730 | 12,439 | 12,291 |
| மத்திய | ... | 18,868 | 9,527 | 9,341 | 21,786 | 10,948 | 10,838 |
| குறைந்த | ... | 17,245 | 8,704 | 8,541 | 19,315 | 9,697 | 9,618 |

மூலம்: குடிசனப் புள்ளி விபரத் திணைக்களம்
பதிவாளர் நாயகத் திணைக்களம்

## இலங்கையின் சனத்தொகை
## ( 1881-1981 )

| ஆண்டு | கணிக்கப்பட்ட சனத்தொகை | வளர்ச்சி வீத அதிகரிப்பு | சராசரி வளர்ச்சி வீதம் | சராசரி இயற்கை வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1881 | 2,759,738 | 15.0 | 1.42 | 0.499 |
| 1891 | 3,007,789 | 9.0 | 0.86 | 0.522 |
| 1901 | 3,565,954 | 18.6 | 1.72 | 0.749 |
| 1911 ... | 4,106,350 | 15.2 | 1.42 | 0.998 |
| 1921 ... | 4,497,854 | 9.5 | 0.91 | 0.777 |
| 1931 ... | 5,306,863 | 18.0 | 1.68 | 1.46 |
| 1946 ... | 6,657,339 | 25.4 | 1.52 | 1.60 |
| 1953 ... | 8,097,895 | 21.6 | 2.8 | 2.5 |
| 1963 ... | 10,582,064 | 30.7 | 2.7 | 2.7 |
| 1971 ... | 12,689,897 | 19.9 | 2.3 | 2.4 |
| 1981 ... | 14,850,001 | 17.0 | 1.7 | 2.1 |

## வயதுப் பரம்பல்
## ( 1981 )

| | சனத்தொகை ( ஆயிரத்தில் ) | | | % பரம்பல் | | |
|---|---|---|---|---|---|---|
| வயது | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| முழுவதும் | 7,568 | 7,280 | 14,848 | 100.0 | 100. | 100.0 |
| 0-14 | 2,671 | 2,566 | 5,237 | 35.3 | 35.2 | 35.3 |
| 15-19 | 815 | 792 | 1,607 | 10.8 | 10.9 | 10.8 |
| 20-24 | 753 | 756 | 1,509 | 9.9 | 10.4 | 10.2 |
| 25-34 | 1,208 | 1,189 | 2,397 | 16.0 | 16.3 | 16.1 |
| 35-44 | 784 | 755 | 1,539 | 10.4 | 10.4 | 10.4 |
| 45-54 | 593 | 559 | 1,152 | 7.8 | 7.7 | 7.8 |
| 55-59 | 222 | 201 | 423 | 2.9 | 2.8 | 2.8 |
| 60-64 | 184 | 158 | 342 | 2.4 | 2.2 | 2.3 |
| 65-69 | 133 | 122 | 255 | 1.8 | 1.6 | 1.7 |
| 70- | 205 | 182 | 387 | 2.7 | 2.5 | 2.6 |

## இன அடிப்படையில் சனத்தொகை

| | இலக்கங்கள் (000) | | வீதம் | |
|---|---|---|---|---|
| இனங்கள் | 1971 | 1981 (1) | 1971 | 1981 (2) |
| எல்லா இனங்களும் | 12,690 | 14,850 | 100.00 | 100.00 |
| கரையோர சிங்களவர் } கண்டியச் சிங்களவர் } | 9,131 | 10,986 | 71.96 | 73.98 |
| இலங்கைத் தமிழர் | 1,424 | 1,872 | 11.22 | 12.60 |
| இந்தியத் தமிழர் | 1,175 | 825 | 9.26 | 5.56 |
| இலங்கைச் சோனகர் | 828 | 1,057 | 6.52 | 7.12 |
| இந்தியச் சோனகர் | 27 | — | 0.21 | -- |
| பறங்கியர் | 45 | 38 | 0.35 | 0.26 |
| மலாயர் | 43 | 43 | 0.34 | 0.29 |
| ஏனையோர் | 16 | 29 | 0.13 | 0.20 |

# இலங்கையின் பொருளாதாரத்தில் சனத்தொகை அதிகரிப்பின் தாக்கம்

— சட்டத்தரணி எம். ஷீ. எம். முனீர்

இலங்கை 25332 சதுர மைல் பரப்பைக்கொண்ட ஒரு தீவாகும். நாளுக்கு நாள் சனத்தொகை அடர்த்தி அதிகரித்து வருகின்றது 1871 ஆம் ஆண்டு சதுர மைல் அடர்த்தி 95 பேர் ஆகக் காணப்பட்டது. இது 1981 ஆம் ஆண்டளவில் 690 பேராகக் காணப்படுகின்றது. எமது நிலப்பரப்பு விஸ்தரிக்க முடியாத தொன்று எனவே பெருகிவரும் சனத்தொகைக்கு இச்சிறிய தீவு ஈடுகொடுக்குமா? என்பது பிரச்சினையாகும். இலங்கை அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரு சிறு மாகாணமான தங்கோயாவின் அளவினதான போதும் இலங்கையின் சனத்தொகை அவுஸ்திரேலியாக் கண்டத்தின் சனத்தொகை அளவாகக் காணப்படுகிறது.

இன்றைய சனத்தொகையில் அதாவது 1½ கோடி மக்களில் 60% க்கு அதிகமானோர் 30 வயதுக்குக் குறைவானவர்கள். எனவே இவர்கள் திருமணம் செய்வதன்மூலம் எதிர்காலத்தில் அதிகமான பிள்ளைகள் பிறக்கும். இதனுல் வரும் காலத்தில் பிறப்பு வீதமானது தற்போதைய வீதத்தினைவிட அதிகரிக்க ஏதுவாகலாம். உண்மையாகப் பார்ப்பதானுல் இவ்விகிதப் போக்கு ஏற்கனவேஆரம்பித்து விட்டமை நோக்கலாம். 1976 ல் 380, 702 பேர் பிறந்தனர். 1977 ல் இது 389522 பேராகவும், 1978 ல் 402780 ஆகவும் அதிகரித்து 1981 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 1123 ஆக அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு பிள்ளை பிறக்கும்போதும் அதற்குத் தேவையான சௌக்கிய செலவுகள், உணவுத்தேவை, பராமரிப்பு செலவுகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. இதே வேளை அபிவிருத்திக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை முதலிட வேண்டியுள்ளது. இந்நிலையில் அபிவிருத்திக்காக செலவிடவேண்டிய தொகைகளைக் குறைத்து சனத்தொகை அதிகரிப்பால் ஏற்படும் செலவுகளை அதிகரிக்கவேண்டியுள்ளது.

அடுத்து நாம் சராசரி தனிநபருக்கான நிலத்தினைக் கவனிப்போமானுல் 1901 ம் ஆண்டில் சராசரி தனிநபர் காணி 415 ஏக்கராகக் காணப்பட்டது. ஆனுல் 1980 ம் ஆண்டு 1 ஏக்கர் ஆகவே காணப்படுகின்றது. இதிலிருந்து நாம் விளங்குவதென்னவெனில் நாம் மிக மோசமான இயற்கை வளப் பற்றுக்குறையை எதிர்நோக்குகின்றோம். உதாரணமாக நாம் மரப் பாவனையை எடுத்துக் கொண்டால் மரங்கள் இரணடு காரணங்கட்காக வெட்டப்படுகின்றன. முதலாவது வீட்டு இடங்களை ஏற்படுத்துவதற்காகவும், விவசாய நிலங்களைப் பெறுவதற்காகவும் வெட்டப்படுகின்றன.

இரண்டாவதாக நிர்மாண வேலைகட்காகவும், எரிபொருள் தேவைக்காகவும் காகித மற்றும் உற்பத்திகட்காகவும் காடுகள் மரங்கள் அழிக்கப்படுகின்றன. இன்று சில தேவைகட்காக மரங்களை இறக்குமதி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். சனத்தொகை வேகம் அதிகரிக்க அதிகரிக்க இவ்வாறுன பாதிப்பு அதிகரிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மிகவும் மோசமான தாக்கம் யாதெனில் சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க நிலையில்லாதோர் தொகை அதிகரிப்பதாகும். அன்மைக்கால கணக்கெடுப்பின்படி தற்போதைய வேலையில்லாதோர் தொகை 10 இலட்சத்தைவிடவும் அதிகரிக்கும். இன்றைய சனத்தொகையில் 15 வயதுக்குட்பட்டோர் 42 வீதம் மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்கள் வேலைப் படையில் சேர்வதன்மூலம் எமது நாட்டு வேலையில்லாப் பிரச்சினை மேலும் மோசமான நிலையை அடையலாம். அதிகரித்து வரும் சனத்தொகைக்கு வேலை வழங்கும் வகையில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி காணப்படவில்லை. எவ்வளவுதான் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பின்மையை ஒழிக்க முற்பட்டாலும் அதே நேரம் புதிதாக பல ஆயிரக்கணக்கானேர் வேலைப்படையில் சேர்கின்றனர். மேலும் இவர்களுக்கு வேலை வழங்க முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டிள்ளது.

முதலீட்டை அதிகரிக்க முடியாதவாறு மூலதனப் பற்றுக்குறை நிலவுகிறது. அதிகரித்துவரும் சனத் தொகைக்கு உணவளிக்கவேண்டும். கல்வி வசதிகள் ஏற்படுத்த வேண்டும். சுகாதார சேவைகள் வழங்க வேண்டும். ஏனைய அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும். அதேவேளை தங்கிவாழ்வோர் தொகையும் அதிகரித்து வருகின்றது.

நேரடியாக சமூக சேவைகட்கு அதிகமான பணம் செலவீடப்படுகிறது. பாலர் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை இலவசக்கல்வி வழங்கவேண்டும் யாவருக்கும் இலவசச் சுகாதாரசேவை வழங்கவேண்டும். உணவுப் பொருள் மானியம் வழங்கவேண்டும். பல இலட்சம் பேருக்கு உணவுமுத்திரை; வறியவர்கட்கு உணவு முத்திரை, குறைந்த செலவில் போக்கு வரத்துச் சேவை என்பவைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றன எனவே எதிர்காலத்தில் அதிகரித்துவரும் சனத்தொகைக்கும் இவ்வாறான தேவைகளை அழிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. அவற்றுக்கு நமது பொருளாதாரம் எவ்வளவு தூரம் இடம்கொடுக்கும் என்பது மிகவும் சிக்கலான விடயமாகும்.

மேலும் சுகாதார வசதிகள் அதிகரிக்கப்பட இறப்பு வீதம் மேலும் குறைவடைந்து, பிறப்புவீதம் மேலும் அதிகரிக்க வாய்ப்பேற்படுகின்றது.

ஆண்டு தோறும் 5வயதுக்கும் 9வயதிற்கும் இடைப்பட்ட பல்லாயிரம் பிள்ளைகள் எவ்விதப் பள்ளிக்கூடப் படிப்பையும் பெறுவதில்லை. இது சமூகச் சீர்கேடுகளை ஏற்படுத்தலாம். மேலும் 62000 பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதாய் இருந்தாலும் ஆரம்பக் கல்வியைக்கூட இவர்கள் முடிப்பதில்லை. வருடாவருடம் பாடசாலை செல்லும் மாணவர் தொகை 409806 ஆல் அதிகரிக்கின்றது. அதே நேரம் வருடாவரும் இவற்றுக்கான செலவு அதிகரிப்பு 133 கோடி ரூபாவாகும். எதிர்காலத்தில் இவை மேலும் அதிகரிக்கும்.

இன்று இலங்கையில் 2943610 வீடுகள் இருக்கின்றன. ஒரு வீட்டில் சராசரி 6 பேர்கள் வாழ்கின்றனர். இதிலே அதிகமானவர்கள் அடிப்படைத் தேவைகளைக் கூடப்பெற்றுக் கொள்ளமுடியாத சேரிகளில் வாழ்கின்றனர். இலங்கையின் மொத்த சனத்தொகையில் குழாய் நீர் வசதி பெற்றுக்கொள்வோர் 20% மாக காணப்படுகின்றனர். மற்றய 80% வீதமானவர்கள் கிணறுகள் மற்றும் நீர்நிலைகளில் நீர் பெறுகிறார்கள். எனவே சனத்தொகையில் 60% மாணவர்களுக்கு சுத்தமான நீர் கிடைப்பதில்லை மொத்தச் சனத்தொகையில் 3% மாணவர்களே சிறந்த மலசலகூட வசதிகளைப் பெற்றுள்ளனர். மேலும் மின்சார வசதியைப் பெற்றுள்ளோர் மொத்த சனத்தொகையில் 9% மாகவே காணப்படுகின்றது. சனத்தொகை அதிகரிக்க் அதிகரிக்க இவ்வாறான வசதிகள் குறைந்து கொண்டுபோகும்.

சுகாதார தேவைகளைப் பார்ப்போமானல் இன்றைய சனத்தொகையில் ஒவ்வொரு 24000 பேருக்கும் ஒரு வைத்தியசாலை மாத்திரம் காணப்படுகின்றது. மேலும் ஒவ்வொரு 6000 பேருக்கு ஒரு வைத்தியர் காணப்படுகிறார். அத்துடன் ஒவ்வொறு 2400 பேருக்கு ஒரு தாதி காணப்படுகிறார். இவ்வாறான நிலை சனத் தொகைப் பெருக்க அதிகரிப்பால் மேலும் பாதிப்படையும். வருடாவருடம் சுகாதாரச் செலவு 10.86 கோடி ரூபாவாக அதிகரிக்கும் வண்ணமாய் இருக்கின்றது.

அதிகரித்துவரும் சனத்தொகைக்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதிகரித்து வரும் சனத்தொகைக்கு போக்குவரத்து வசதி அளிக்க வருடாவருடம் இலங்கைப் போக்குவரத்து சபை 1500 வஸ் வண்டிகள்வரை புதிதாக இறக்குமதி செய்கின்றது. அவ்வாறு செய்தபோதும் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கமுடியாது போகின்றது. அரசாங்கம் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அதிகரிக்க வழிவகை செய்தது இன்று இலங்கையில் தனியார் வஸ்களின் எண்ணிக்கை இ. பொ. ச. வஸ்களின் எண்ணிக்கையை விட அதிகரித்துவிட்டது. இருந்தும் போக்குவரத்துப் பிரச்சினை பூரணமாக நீங்கவில்லை சனத்தொகை மேலும் அதிகரிக்க இப்பிரச்சினை மேலும் வலுவடையலாம்.

இவ்வாறாக எத்துறையை எடுத்துக் கொண்டாலும் சனத்தொகையானது பாதிக்கின்றது. இந்நிலையால் சனத்தொகை கட்டுப்படுத்தப்படாவிடின் எதிர்பாராத விளைவுகளை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படும். இலங்கைப் பொருளாதாரம் தற்போதிருக்கும்

பிரச்சினைகளைக்கூட தீர்க்க முடியாது போய்விடும். எனவே சனத்தொகை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிவிட்டது.

நாட்டு மக்கள் சுகதேகியாக இருந்தால்தான் அவர்கள் அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடமுடியும். குடும்ப சுகாதாரம் பேணப்படின் நாட்டின் சுகாதாரம் பேணப்படும். எனவே ஒரு தாயின் சுகாதாரம் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். பிறக்கும் குழந்தைகள் சக்திமிக்கவர்களாக இருக்கும். அதிகமாக பிள்ளைகள் பிறக்கும்போது ஒரு புறம் தாயின் தேக சுகம் பாதிக்கப்படுவதுடன் பிறக்கும் குழந்தைகள் வலுவற்றவர்களாகக் காணப்படுவார்கள்.

நாட்டின் வருமானத்தைவிட தாங்க முடியாத அளவு சனத்தொகை பெருகுமாயின் அது அபிவிருத்திக்குச் சவாலாக அமையும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதுடன் வாழ்க்கைத் தரம் கீழ்நோக்கிச் செல்லும், வறுமை, பசி, பஞ்சம் மலிந்துவிடும். குற்றச்செயல்களும் அதிகரிக்க வாய்ப்பேற்படுகின்றது.

---

# குழந்தைச் செல்வம்

சனத்தொகைக் குடும்பத்திட்டக் கல்வி, குடும்பத் திட்ட செய்தித் தொடர்பு விளம்பரம் என்பன உலகில் உள்ள எல்லா செல்வங்களிலும் குழந்தைகளை முதன்மையானவர்கள் என்ற நேர்மையான கருத்திலேயே ஆரம்பித்து, தங்கி, தொடர வேண்டும். ஒரு வீட்டை ஒளி பெறச் செய்பவை குழந்தைகளே. இருவர் திருமணம் செய்து, காலகதியில் ஒரு குழந்தை பிறக்காவிட்டால் அந்த வீடு இருள்மயமானதாகவே இருக்கும்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் உயிரூட்டும் அம்சம் குழந்தைச் செல்வமே.

அத்துடன் குடும்பத் திட்டச் சேவை செய்வோர் குழந்தைகளை மிகவும் நேசிக்கிறார்கள் என்பதையும் அவர்கள் குழந்தைகள் மீது அளவு கடந்த அன்பு கொண்டுள்ளதால் அவர்கள் அக்குழந்தைகள் கஷ்டப்படுவதை விரும்புவதில்லை என்பதையும் மக்கள் அறியச் செய்ய வேண்டும்

இப்படியான உண்மைகளைத் தாம் உணர்ந்திருப்பதையும் மக்கள் அறியச் செய்ய வேண்டும்.

அனாதை விடுதிகளில் திடகாத்திரமான அனாதைச் சிறுவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு போதியளவு அன்பு கிடைப்பதில்லை. அன்புக்கு மாற்றுப் பொருள் எதுவுமே கிடையாது. தாய்மாரை கடைகளில் வாங்க முடியாது. குழந்தைகளை விட சிறந்த செல்வங்கள் இல்லை என்று மேடைதோறும் கூறப்பட்டதோடு விளம்பரங்களும் இந்தக் கருத்துப்படவே வெளியிடப்பட்டன.

'உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் அவை பிறக்கும்போது வரவேற்கவே விரும்புகிறோம். அக்குழந்தைகளின் வருகைக்காக அவர்களின் பெற்றோர் பேராவல் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஒரு பெண்ணின் வாழ்விலே அவள் கருவுற்று இருக்கும் ஒன்பது மாதங்களையும், குழந்தைக்காக ஆவலுடன் காத்திருக்கும் வேளையைத் தவிர வேறு மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பம் இருக்க முடியாது குழந்தைகளின் வருகைக்காக, காத்திருப்பது எவ்வளவு புதுமையானது. அற்புதமானது, என்பதைப் பெண்கள் மட்டுமே அறிவார்கள்.

நான் இளைஞனாக இருந்த வேளை என்னுடன் தொழில் செய்த ஓர் எழுத்தாள நண்பர் தமது கட்டுரை ஒன்றில் பாவித்த சொற்றொடர் இன்னும் என் மனதை விட்டகலாமல் உள்ளது. ''என் தாயின் உதட்டில் நான் ஒரு புன்னகையாக மட்டும் இருந்தபோது'' என்பதே அச்சொற்றொடர் நான் என்றும் வசித்தறியாத ஒரு அற்புதமான சொற்றொடர் இது எனில் மிகையாகாது. ''நான் தாயின் உதட்டில் ஒரு புன்னகையைவிடச் சிறந்த அற்புதமான வேறொன்றுமில்லை அதுதான் ஒரு கர்ப்பவதியின் புன்னகை.'

குடும்பத்திட்டச் சேவையாளர்களாகிய நமது பணி உலகெங்கும் உள்ள தாய்மாரின் அந்தப் புன்னகையை ஒழிப்பது அல்ல. பதட்டமின்றி தேவையேற்படும்போது, அவர்கள் கவனித்து பராமரிக்க முடியும் போது, அவர்கள் அன்பு செலுத்தவும் சிறப்பாகப் பாதுகாக்கவும் முடியும் என்ற நிலைக்கு வரும்போது அவர்கள் குழந்தைகளைப் பெற உதவி செய்தலே எமது கடமை. குடும்பத்திட்டம் அன்புடன் தொடர்பு உடையது. உலகில் தோன்றும் அழகான பொருள்களைத் தடுப்பதல்ல குடும்பத்திட்டத்தின் நோக்கம்.



சனத்தொகை பற்றிய கண்காட்சியொன்றைப் பார்வையிடல்



குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி ஏற்றுதல்

எல்ஜீஸ் லங்கா பிரைவேட் லிமிடட் கொழும்பு 3.